பாலக்காடு
ஆர். வி. ஜி.
பீடிகளை
உபயோகியுங்கள்
தயாரிப்பாளர்கள்:
வ. வ. இராமசாமிப்பிள்ளை
அன் சன்ஸ்
47, பீச்ரேட், யாழ்ப்பாணம்.

Registered at the G. P. O. as a Newspaper விலை சதம் 20

# ஈழநாடு

EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily
மலர் 9 இதழ் 65
பிலவங்க சித்திரை 4 முஹறம் (17-4-67) திங்கட்கிழமை

MILK WHITE SOAP
மில்க் வைற்
நீல சோப், பார் சோப்
எல்லாவித துணிகளையும், அலுமினியப் பாத்திரங்களையும், கண்ணாடி வகைகளையும் ஆச்சரியப்படத் தக்க முறையில் சுத்தமாக்குகிறது

# இந்திரா இல்லத்தில் இராணுவம் காவல்



## ஜனாதிபதி மாளிகைக்கும் துருப்புகள் பாதுகாப்பு

### பொலிஸார் கிளர்ச்சி எதிரொலி

புதுடில்லி, ஏப்.16

இந்திய ஜனாதிபதி மாளிகையும் பிரதமர் திருமதி இந்திராகாந்தியின் வாசஸ்தலமும் இப்பொழுது இராணுவத்தினரால் காவல் புரியப்படுகிறது.

புதுடில்லியில் இன்றுகாலையும் 36பொலிசார் கைது செய்யப்பட்டனர். ஊர்வலங்கள்கூட்டங்கள்நடத்துவதற்கு புதுடில்லியில் 14 தினங்களுக்குவிதிக்கப்பட்ட தடை உத்தரவை மீறி ஊர்வலம் நடத்த முயன்ற 36 பொலிசார் இன்று காலை கைதுசெய்யப்பட்டனர். புதுடில்லியிலுள்ள 3000 பொலிசார் சம்பள உயர்வு கோரி கிளர்ச்சி செய்கின்றனர். இவர்களின் கிளர்ச்சியைத் தொடர்ந்தே ஜனாதிபதி மாளிகையும் பிரதமரின் இல்லமும் இராணுவத்தினரால் காவல் புரியப்படுகின்றன

இருபது இராணுவ லொறிகளில் இராணுவத் துருப்புக்கள் இன்று டில்லியில் கேந்திர ஸ்தானங்களில் நிறுத்தப்பட்டன 'ரிசர்வ்' பொலிசாரும் சேவைக்கு அழைக்கப்பட்டனர்.

## 700 பொலிஸார் டில்லியில் கைது

புதுடில்லி, ஏப்ரல் 16

புதுடில்லியில் இந்தியஉள்துறை மந்திரி சவான் இல்லத்தின் முன் 'மறியல்' இயக்கத்தில் ஈடுபட்ட 675 பொலிசார் நேற்று கைது செய்யப்பட்டனர். கைது செய்யும் வேலை மிகஅமைதியாக சுமார் 20நிமிடங்களுக்குள் நடந்துமுடிந்தது.

சம்பள உயர்வு உட்பட வேறு சில கோரிக்கைகளை முன்வைத்து டில்லிப் பொலிசார் ''போராட்டம்'' நடத்துகின்றனர். திரு. சவான் இல்லத்துக்கு ஊர்வலமாகச் செல்ல முயன்ற இவர்களை பொலிசார் கண்ணீர்ப் புகைப்பிரயோகம் செய்து கலைத்தனர். எனினும் அவர்கள் சவானின் இல்லத்தின் முன் கூடி இரவிரவாகவிழித்திருந்து ''மறியல்'' செய்தனர்.

பொலிசாரின் கோரிக்கைகளை ஆராய்ந்து அவர்களின் நியாயமான குறைகளை நீக்க நடவடிக்கை எடுக்கப்படுமென்றும், பொலிசாரின் குறைகள் பற்றி ஒரு விசாரணைக் கமிஷன் ஆராய்ந்துவருவதாகவும் திரு. சவான தெரிவித்தார்.

பொலிசாரின் இந்தக் கிளர்ச்சிகளுக்கு சில அரசியல் கட்சிகள் பின்னணியில் நின்று ஆதரவளித்து வருவதாக குற்றம்சாட்டினர்.

## மலேசிய பிரதமர் இன்று வருகிறார்

கொழும்பு, திங்கள்

மலேசிய பிரதமர் துங்கு

[12-ம் பக்கம்பார்க்க]

## பிறவிக்குருடர் பி.ஏ. பட்டதாரியானார்

கொழும்பு, ஞாயிறு

இலங்கையின் சரித்திரத்தில்முதல்தடவையாக பிறவிக்குருடர் ஒருவர் பி ஏ. பரீட்சையில் சித்தியெய்தி பட்டதாரியாகியிருக்கிறார். தத்துவம், பொருளாதாரம், சரித்திரம் ஆகியபாடங்களில் பட்டம் பெற்றுள்ளஇவர் சென்ற். ஜோசேப் கல்லூரியிலும் பின்னர் இரத்மலானை குருடர் செவிடர் பாடசாலையிலும் படித்திருக்கிறார். ஐந்துபிள்ளைகளின் குடும்பத்தில் இவர்தான் மூத்தபிள்ளை.

வல்வை சமபவ மரண விசாரணை

## 'கூட்டத்துள் புகுந்து பொலிசார் குண்டாந்தடிகளால் தாக்கினர்

### எம்.பி.யையும் என்னையும் இன்ஸ்பெக்டர்பூட்டிவைத்தார்

### சனசமூக சேவா நிலைய தலைவர் சாட்சியம்

வல்வெட்டித்துறை, ஞாயிறு

''இம்மாதம் 8-ம் திகதி பிற்பகல்வல்வெட்டித்துறை சனசமூக நிலைய முன்றலில் கூட்டமொன்று நடைபெற்றது. அக்கூட்டத்திற்கு நான் தலைமைதாங்கினேன். கூட்டம்நடைபெற்ற மேடையில் என்னுடன் பருத்தித்துறை எம். பி. திரு. துரைரத்தினம், பட்டினசபைத்தலைவர் திரு. வி. இரத்தினவடிவேலு திரு. வேற்பிள்ளை ஆகியோரும் வேறு சில பிரமுகர்களும் அமர்ந்திருந்தனர். பொலிசாருக்கும்- பொதுமக்களுக்கும் இடையிலேற்பட்டிருந்த தகராறை அகற்றச் செய்து இருசாராருக்குமிடையில் நல்லுறவை ஏற்படுத்தும் நோக்கமாகவே இக்கூட்டம் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது. கூட்டம் அமைதியாக நடைபெற்றுக் கொண்டிருக்கையில் வல்வெட்டித்துறைப்பொலிசார் திடீரெனக் கூட்டத்திற்குள் புகுந்து பொதுமக்களை குண்

[12-ம் பக்கம் பார்க்க]

## 'பெற்றோல் நிலைய பக்கத்தால முதலில் வெடிச்சத்தம் கேட்டது'

### பொலிஸ் கான்ஸடபிள் சில்வா சாட்சியம்

கான்ஸ்டபிள் சில்வா சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

இம்மாதம் 8-ம் திகதி பிறபகல் 7-25 மணியளவில் இன்ஸ்பெக்டர் பத்திரான தலைமையில் நானும், சார்ஜண்ட் இராசரத்தினமும், கான்ஸ்டபிள் திசநாயக்கா, பியதாசா ஆகியோரும் ஜீப்பில் ரோந்து சுற்றப் புறப்பட்டுச் சென்றோம். பொலிஸ் நிலையத்திலிருந்து புறப்பட்டு காங்கேசன்துறை வீதி, பொலிகண்டி வீதி ஆகிய வீதிகளில் சிறிது தூரம் சென்றுவிட்டு பொலிஸ் நிலையத்திற்குத் திரும்பி வந்தோம். அந்நேரத்தில் வல்வை சந்தியில் ஒரு கூட்டமொன்று நடந்து கொண்டிருந்தது. அவ்விடத்தில் வந்துகொண்டிருக்கையில் சனக்கூட்டம் ஜீப்பை தடுத்தது. ஜீப்மீது கல் எறியும்,' போத்தல் வீச்சும் வந்து விழுந்தது. இன்ஸ்

(12-ம் பக்கம் பார்க்க)

சிங்கம் மார்க் சந்தனாதித் தைலம்

யாழ்ப்பாண பகுதி ஏஜண்ட்:
என். எம். எஸ். அன்ட் பிரதர்
கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார சாரம் — அரசியல் நிருபர்

# மாவட்ட சபை மசோதாவை காங்கிரஸ் எதிர்ப்பது ஏன்?

## ஆதரிப்போர் எதிர்ப்பதும் எதிர்ப்போர் ஆதரிப்பதும்தான் அரசியலா?

**மா**வட்டசபை மசோதாவை எதிர்த்து வாக்களிக்கப்போவதாக தமிழ்க் காங்கிரஸ்தலைவரும் யாழ்ப்பாண எம். பி. யுமான திரு. ஜி.ஜி. பொன்னம்பலம் பகிரங்கமாக அறிவித்திருக்கிறார்.

மாவட்டசபைகள் மசோதா எப்பொழுதுவரும் என்பது இன்னும் திட்டவட்டமாகத் தெரியவில்லை. தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த காலம்தொடக்கம் அந்தஅரசாங்கத்தை அமைப்பதற்கு அதனுடன் சேர்ந்து உதவியும் ஒத்துழைப்பும் அளித்த தமிழரசுக்கட்சியினர் 'மாவட்டசபைகள் மசோதா'



விரைவில் வரும் என்று கூறி வந்திருக்கின்றனர். மாவட்டசபைகளினால் தமிழ் பேசும் மக்களுக்கு இங்கு கிடைக்கக்கூடிய உரிமைகள் பற்றியும் அவர்கள்எடுத்துக் கூறிவந்திருக்கின்றனர். தேசிய அரசாங்கம் ஆட்சிக்குவருவதற்கு முன்னரே மாவட்டசபைகள் பற்றி அவர்கள் மேடைகளிலும் பத்திரிகைகள் மூலமாகவும் விளக்கம்கொடுத்துவந்திருக்கின்றனர். இலங்கையில் ஒரு சமஷ்டி அமைப்பைஏற்படுத்துவதே தமிழரசுக்கட்சியின் நோக்கம். உண்மையானசமஷ்டி அமைப்பு என்பதுநாட்டின் நிர்வாகம் ஒரே இடத்தில் குவிந்திருக்காமல் அதிகாரங்களைப் பரவலாக்குவது தான் தமிழரசுக் கட்சியின் தோற்றமும் வளர்ச்சியும் அதன் 'சமஷ்டிக்கொள்கை' பற்றி பெரும்பான்மைச்சமூகத்தவர்மத்தியில் சந்தேகத்தையும் பீதியையும ஏற்படுத்தியது சிங்களப்பொது மக்கள் மத்தியில் தமிழரசுக் கட்சி தனது கொள்கைகளையும் இலட்சியங்களையும் எடுத்துக்கூறத் தயங்கியதும், அதற்குவாய்ப்பு இல்லாமல் போனதும், தமிழரசுக்கட்சியைப்பற்றி இதர அரசியல் கட்சிகள் சிங்களப்பொதுமக்கள் மத்தியில் தவறான கருத்தை கற்பிக்க முடிந்தது. சமஷ்டிஆட்சி அமைப்பு'' கோரிக்கையாகத் 'தனிநாடு' கோரிக்கையை திரித்து தமிழரசுக்கட்சியினர் நாட்டைப் பிரிக்கப் பார்க்கிறார்கள் என்ற பிரசாரம் சிங்களப் பொதுமக்கள் மத்தியில் தமிழரசுக் கட்சியினர்மீதுவெறுப்பையும் அச்சத்தையும் உருவாக்கியது. இதனால் சிங்களமக்களின் வாக்குகளை நம்பியிருக்கும் அரசியல்கட்சிகள் தமிழரசுக்கட்சியின் கொள்கையை எதிர்த்தன. சமஷ்டிஆட்சி முறைதான் இலங்கைக்குப் பொருத்தமானது என முன்னொருகாலத்தில் கூறிவந்த காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகாகூட, 'சமஷ்டி' என்பது 'நாட்டைப்பிரிவினை' செய்வது என்று வியாக்கியானம் செய்யத் தொடங்கினார். இதன் விளைவுகளை உணர்ந்துகொண்ட தமிழரசுக்கட்சியினர் 'சமஷ்டி ஆட்சி அமைப்பை' நேரடியாக இங்கு ஏற்படுத்திக் கொள்வது சுலபமல்ல என்பதைத் தெரிந்து கொண்டனர். இதனால்தான் காலஞ்சென்ற பிரதமர் திரு .பண்டாரநாயகாவுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் ''பிரதேசசபைகள்'' அமைப்பதற்கான ஷரத்துசேர்க்கப்பட்டது. வடக்கிலும், கிழக்கிலும் அமைக்கப்படும் பிரதேச சபைகள் தாம் நிறைவேற்றும் தீர்மானத்தின் மூலம் ஒன்றுடன்ஒன்று இணைந்து இரண்டுமாகாண பிரதேசசபைகளும்ஒன்றாகச் சேர்ந்து கொள்ளக்கூடிய வாய்ப்பை அதிலுள்ள ஒரு ஷரத்து அளித்திருந்தது. இதன்மூலம் 'சமஷ்டிஆட்சி' முறையை ஏற்படுத்திக் கொள்ளலாமென தமிழரசுக் கட்சியினர் கருதினர். இதுவிவேகமான செயல் தான் எனினும் இதைத் தமிழரசுக்கட்சியினர் சிலர் வெளியே வியாக்கியானம் செய்யத்தொடங்கியது ஆபத்தான நிலையை ஏற்படுத்தியது. பிரதேசசபைகள் அமைப்பதற்கு சிங்கள மக்கள் மத்தியில் எதிர்ப்புக் கிளம்பியது. அச்சமயம் எதிர்க்கட்சியினராக இருந்த யு. என். பி.யினரும் தமிழ்க் காங்கிரசும் பண்டாரநாயகா—செல்வநாயகம் ஒப்பந்தத்தை எதிர்த்தன. இதை சில தீவிர வகுப்புவாதிகள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி 'பண்டா—செல்வா' ஒப்பந்தத்தைக் கிழித்தெறியச் செய்தனர்.

இதன்பின் ஆட்சி பீடமேறிய திருமதி பண்டாரநாயகா தலைமையிலான ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி அர



சாங்கம் 'பிரதேச சபைகள்' என்ற பெயரைவிடுத்து 'மாவட்ட சபை'கள் என்ற பெயரில் தமிழரசுக்கட்சியின் கோரிக்கையை நிறைவேற்ற முன்வந்தது. சிம்மாசனப் பிரசங்கத்திலும் இதுபற்றி அந்த அரசாங்கம் தெரிவித்தபோதிலும் அது காலம் கடத்திவந்தது. அதன் ஆட்சி கவிழ்வதற்கு இதுவும் ஒரு காரணம் என்று கூறலாம். இதன்பின் தமிழரசுக் கட்சியின் ஒத்துழைப்புடன் ஆட்சி பீடமேறிய தேசீய அரசாங்கம்' மாவட்ட சபைகள் அமைக்க ஒப்புக்கொண்டது. இதுபற்றி பார்லிமென்டிலேயே பிரதமர் எடுத்துக் கூறியதுடன் [illegible] சாங்கம்

ஒப்புக்கொண்டசலுகைகளையும் உரிமைகளையும்விட தேசிய அரசாங்கம் கொடுக்கும் மாவட்டசபைகள், உரிமைகளும், சலுகைகளும் குறைந்தனவாகத்தான் இருக்கும் என்று பிரதமர் தெரிவித்திருந்தார்.

'மாவட்ட சபைகள்' அமைப்பதில் பிரச்னையில்லை. எந்த அரசாங்கம், யார் பிரதமராக இருக்கும் பொழுது மாவட்ட சபைகள் அமைக்க அனுமதியளிப்பது என்பதுதான் பிரச்னை. இதேபோல் தமிழ் பேசும் மக்களுக்கு உரிமைகளோ சலுகைகளோ கிடைப்பதாயிருந்தால் யார் அதைப் பெற்றுக்கொடுக்கவேண்டும், எந்தக் கட்சி பெற்றுக் கொடுத்ததாக இருக்கவேண்டும் என்பதுதான் இன்றைய பிரச்னை.



### அரசாங்கத்தில் அங்கம்

தமிழ்க்காங்கிரசும் தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கிறது. தமிழரசுக் கட்சியும் அதில் அங்கம் வகிக்கிறது. இவ்விரு கட்சிகளும் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளைப் பெற்றுக்கொடுப்பதற்காகவே உருவாகின. அதற்காகவே அவைகளை தமிழ் பேசும் மக்கள் தேர்தலில் தெரிவு செய்து, அனுப்பினர். 'சமஷ்டி ஆட்சி' அமைப்பது அதற்கு முன்னோடியாக பிரதேசசபைகள் அல்லது மாவட்டசபைகள் அமைப்பது என்று தேர்தல் காலத்தில் தமிழரசுக் கட்சியினர் உறுதியளித்திருக்கின்றனர். 'மாவட்ட சபைகள்' அமைப்பது தமிழ் பேசும் மக்களுக்கு நன்மையா, தீமையா என்பது சென்ற தேர்தல் சமயத்திலேயே மக்கள் ஆராய்ந்து தீர்ப்பளித்திருக்கவேண்டும். அதில் தவறினாலும் இன்று மக்களால் தெரிவு செய்யப்பட்டுள்ள தமிழ் பேசும் பிரதிநிதிகளான தமிழ் அரசு, தமிழ்க்காங்கிரஸ், மற்றும் அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் நியமன அங்கத்தவர்களான மலைநாட்டுத் தமிழர்களின் பிரதிநிதிகளான திரு. தொண்டமான், திரு. அண்ணாமலை போன்றோரும் ஒன்று கூடி விவாதித்து, ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வரலாம்.

தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபின், மாவட்ட [illegible] மேடை

களில் விளங்கப்படுத்திவந்த சமயத்தில்தமிழ்க்காங்கிரஸ் தலைவரும் மற்றையோரும் ''மாவட்ட சபைகளால்'' தமிழ்பேசும் மக்களுக்கு எதுவித நன்மையும் ஏற்படமாட்டாது என்று கூறிவந்தனர், ஆயினும் மாவட்ட சபை மசோதாவை எதிர்த்து வாக்களிக்க மாட்டோம் என்று திரு. பொன்னம்பலம் கூறிவந்திருக்கிறார்.

இப்பொழுது மாவட்ட சபைமசோதாவை எதிர்த்து வாக்களிப்பேன் என்று கூறியிருப்பதன் காரணம்என்ன?

மாவட்டசபை அமைப்பதற்கு முன்னர் ஒப்புக்கொண்ட எதிர்க்கட்சியினர் இப்போது எதிர்க்கின்றனர். மாவட்டசபை அமைப்பதற்கு முன்னர் எதிர்த்த இன்றைய ஆளும்கட்சியைச் சேர்ந்த யு. என். பி. யினர் அதற்கு இப்போது ஒப்புக்கொள்கின்றனர்.

இதுதானா அரசியல், இது தானா ஜனநாயகம்?

வடபகுதியில் ஒரு துறைமுகம் அமைக்கப் படவேண்டும் என்ற கோரிக்கைகிளம்பியதும், ஊர்காவற்றுறையில் அமையுங்கள், காங்கேசன்துறைதான் அதற்குப் பொருத்தம், பருத்தித்துறைதான் தகுந்த இடம் என்று ''இங்குள்ளோர்'' தமக்குள் வேற்றுமைப்பட்டு நின்றதும், முன்னாள் பிரதமர் திரு. டி. எஸ். சேனநாயகா, ''ஒற்றுமையாக ஓர் இடத்தைச் சொல்லுங்கள்'' என்று கூறி அந்தப் பிரச்னையைஅப்படியே விட்டுவிட்டார்.

இன்றும் தமிழ் பேசும்மக்களுக்குள் அவர் தம் தலைவர்களுக்குள் எந்த ஒரு விஷயத்திலும் ஒற்றுமை இருக்குமானால் தமிழர்கள் இன்றைய அவல நிலைக்கு வந்திருக்க நேரிட்டிருக்குமா?

### அரசியல் திருமணம்

லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர்களில் ஒருவரான டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வாவின் மகள் செல்வி மனோரி டி சில்வாவுக்கும் கம்யூனிஸ்ட் [சோவியத் சார்பு] கட்சி வாலிபர் இயக்கத்தலைவர்களில் ஒருவரான திரு. சரத் முத்தெட்டுவகமவுக்கும் திருமண நிச்சயதார்த்தம் நடைபெற்றிருக்கிறது. மணமகனும் மணமகளும் இடதுசாரிக்கட்சிகளைச் சேர்ந்தவர்கள். இடதுசாரிக் கொள்கையுடையவர்கள். இருவரும் செல்வாக்கும், சொத்தும் உள்ளகுடும்பத்தவர். அரசியலிலும் இப்போது கூட்டுச் சேர்ந்திருப்பவர்கள். இருவரும் வழக்கறிஞர்கள். இந்த இணைப்புப் பொருத்தமானதுதான்.



### தென்னிந்திய சஞ்சிகைகள்

உலகெலாம் ஒருகுடும்பம் என்ற கருத்துடையவர்கள் பத்திரிகைத் தொழிலில்ஈடுபட்டவர்கள்என்று கருதப்படுவதுண்டு. இலங்கையில் ''இலங்கைஉழைக்கும் பத்திரிகையாளர் சங்கம்'' ஒன்று தென்னிந்தியாவிலிருந்து இங்குவரும் சஞ்சிகைகளும் பத்திரிகைகளும் இந்நாட்டின்அரசியல்பொருளாதார கலாசார வாழ்க்கைக்குப் பயமுறுத்தலாகஇருப்பதாக அச்சம் தெரிவிக்கிறது. இந்தச்சங்கம் ஏன் இப்படிப் பயப்படுகிறது? தென்னிந்தியாவிலிருந்து இங்கு சஞ்சிகைகளும் பத்திரிகைகளும் இறக்குமதியாவதைத் தடைசெய்யவேண்டும் என்றுஅது கேட்கிறது.

தமிழ்ப் பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் தான் இங்கு அரசியல், பொருளாதார, கலாச்சாரத்துக்குப் பயமுறுத்தலா? அமெரிக்காவிலிருந்தும் சீனாவிலிருந்தும் இங்கு பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் வந்து குவியவில்லையா? கொலை, களவு முதலிய தீய பழக்கவழக்கங்களைத் தூண்டிவிடக்கூடிய சஞ்சிகைகளும், திரைப்படங்களும் இங்கு பிறநாடுகளிலிருந்து வந்து குவியவில்லையா? மத விரோதமான சஞ்சிகைகள் இங்கு இலவசமாக வந்து விநியோகிக்கப்படவில்லையா? இலங்கையில் உழைக்கும் பத்திரிகையாளர்களுக்கு எத்தனையோ கஷ்டங்களும் பிரச்னைகளும் இருக்கின்றன. இதில் இந்தச் சங்கம் கவனம் செலுத்தினால் என்ன?

### புளி மல்லிக்கு பதில் வானொலி

காரைநகர், திங்.

புளி மல்லி ஆகியவற்றைக் கொண்டு வந்த ஒருவர் வீட்டில் சென்றுபிரித்துப் பார்த்தபோது அவ் அட்டைப் பெட்டிக்குள் வானொலிப் பெட்டி இருப்பதைக் கண்டு அதிசயப்பட்டார்.

சென்ற வாரம் யாழ்தேவியில் பிரயாணம் செய்த காரைநகர் மேற்கைச் சேர்ந்த திரு. மு. சபாபதிப் பிள்ளையே அந்த நபராவர்.

வானொலிப் பெட்டியைக் கொண்டுவந்தவர் தவறுதலாகத் தமது பெட்டியை எடுத்துச் சென்றதாலேயே இந் நிலை ஏற்பட்டது என அவர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுத உதவி நிறுத்தத்தில் அமெரிக்க 'நல்லெண்ணம்' தெரிந்துவிட்டது

## உலக மேடை

எஸ். எம். ஜி.

ஆசிய ஆபிரிக்க நாடுகள் தலைதூக்குவதை மேல்நாடுகள் விரும்பவில்லை என்றும் புதிதாக விடுதலையடைந்த ஆசிய ஆபிரிக்க நாடுகளுக்கிடையில் எப்படியும் எந்த விதத்திலும் பிளவையும் மோதலையும் ஏற்படுத்துவதே அவைகளின் நோக்கமாக இருக்கின்றது என்றும் சென்றவாரம் இதே மேடையில் நான் குறிப்பிட்டிருந்தேன். எனது கருத்து எவ்வளவுதூரம் உண்மையென்பதை இந்தியா, பாகிஸ்தானுக்கு ஆயுதங்கள் வழங்குவது சம்பந்தமாக சமீபத்தில் அமெரிக்கா செய்துள்ள முடிவு உறுதிப்படுத்தியிருக்கிறது.

1965-ம் ஆண்டில் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் சண்டை ஏற்பட்டபோது இந்த இரு நாடுகளுக்கும் அளிக்கப்பட்டுவந்த இராணுவ உதவியை அமெரிக்கா, நிறுத்திக்கொண்டது. இந்திய உபகண்டத்தில் அமைதி நிலவ வேண்டுமென்றும் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் சண்டை நடைபெறுவதையும் இச்சண்டையில் அமெரிக்க ஆயுதங்கள் பாவிக்கப்படுவதையும் தாங்கள் விரும்பவில்லையென்றும் அமெரிக்கர் கூறிவந்துள்ளனர்.

1965.ம் ஆண்டில் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் சண்டை நடைபெற்றபோது அமெரிக்காவிடமிருந்து பெற்ற ஆயுதங்களை பாகிஸ்தான் உபயோகித்தது. இந்தியாவும் அமெரிக்க ஆயுதங்களை உபயோகித்ததாக பாகிஸ்தான் குற்றம் சாட்டியது. இக்குற்றச்சாட்டுகளைத் தொடர்ந்தும் சண்டையில் அமெரிக்க ஆயுதங்கள் படுசேதமடைந்ததன் விளைவு காரணமாகவும் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமளித்துவந்த இராணுவ உதவியை 1965-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5-ந் திகதி அமெரிக்கா நிறுத்திக்கொண்டது. நிறுத்தப்பட்ட இந்த இராணுவ உதவியை மீண்டும் பெறுவதற்கு இரு நாடுகளும் முயற்சி செய்தன. பாகிஸ்தான் பெரு முயற்சி செய்தது என்று கூறலாம். பாகிஸ்தானுக்கு மீண்டும் இராணுவ உதவியளிக்க அமெரிக்கா விரும்பியது. சென்ற வருடத்தில் மீண்டும் உதவியளிக்க அது விருப்பம்கொண்ட போதிலும் இந்தியாவில் பொதுத் தேர்தல் நெருங்கியதால் அமெரிக்காவுக்கு எதிரான சக்திகளுக்கு இடம் கொடுத்ததாய் முடிந்துவிடுமெனக் கருதி அந்த விருப்பத்தை அமெரிக்கா நிறைவேற்றத் துணியவில்லை.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் நிறுத்திவைக்கப்பட்டுள்ள இராணுவ உதவியை மீண்டும் வழங்குவதில்லையென்று அமெரிக்கா சில தினங்களுக்குமுன் முடிவு செய்தது. ஆனால் இதனுடன் மற்றொரு முடிவையும் அமெரிக்கா செய்திருப்பது வேடிக்கையாகவும் விபரீதமாகவும் இருக்கிறது. அதாவது, புதிதாக இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இனி ஆயுதங்கள் வழங்குவதில்லை என்றாலும் முன்னர் வழங்கிய ஆயுதங்களுக்குத் தேவையான உதிரிப் பாகங்களை அந்த இரு நாடுகளுக்கும் அமெரிக்கா விற்பதற்குத்தயாராக இருக்கிறது. உதிரிப் பாகங்கள் வழங்குவதற்குஇருந்துவந்த கட்டுப்பாட்டை அது நீக்கியிருக்கிறது.

### அமெரிக்க உதவி யாருக்கு அதிகம்

ஒன்றாக இருந்த இந்திய உபகண்டம் இந்தியாவும் பாகிஸ்தானும் என இரண்டாகப் பிரிந்தது. வல்லரசுக் கோஷ்டி எதிலும் சேராத, எல்லோருடனும் நட்புறவுடன் வாழும் 'நடுநிலைமை'க் கொள்கையைத்தனதுவெளிவிவகாரக் கொள்கையாகக் கொண்டது இந்தியா. பாகிஸ்தானோ, 'கம்யூனிஸப் பூச்சாண்டியை'க்காட்டி அமெரிக்கா நேரடியாகவும், மறைமுகமாகவும் இருந்து உருவாக்கிய ''நேட்டோ'', ''சியாட்டோ'', ''சென்டோ'' என்ற இராணுவக் கூட்டுகளில் சேர்ந்துகொண்டது. இந்த இராணுவக் கூட்டுகளில் சேர்ந்ததன் பயனாக அது வெளிநாடுகளிலிருந்து இராணுவ, பொருளாதார உதவியும் பெற்றது. 1954-ம் ஆண்டிலிருந்து பாகிஸ்தானுக்கு அமெரிக்கா, இராணுவ உதவி அளித்துவந்திருக்கிறது. 1954-ம் ஆண்டிலிருந்து 1965-ம் ஆண்டுவரை அமெரிக்காவிடமிருந்து 180 கோடி டாலர் பெறுமதியான இராணுவ உதவியை பாகிஸ்தான் பெற்றிருக்கிறது. கம்யூனிஸ்ட் சீனாவின் ஆதிக்கம் பரவாமல் 'ஜனநாயகத்தை' உலகில் பாதுகாக்கும் நோக்கத்துடன்தான் அமெரிக்கா, பாகிஸ்தானுக்கு இராணுவ உதவியளித்துவந்தது. அப்பொழுது சீனாவுடனும் 'சமாதான சகவாழ்வு' கொள்கையைக் கடைப்பிடித்துவந்த இந்தியா, பாகிஸ்தானுக்கு இராணுவ உதவி அளித்து ஆயுதங்கள் வழங்கிவருவது இந்திய உபகண்டத்தின் அமைதிக்கே ஆபத்தாகுமென அமெரிக்காவுக்கு ஆட்சேபம் தெரிவித்தது. இந்த ஆட்சேபத்தில் அர்த்தமில்லையென்றும் அமெரிக்க ஆயுதங்களை இந்தியாவுக்கு எதிராக பாகிஸ்தான் உபயோகிக்கமாட்டாதென்றும் உபயோகிக்கக்கூடாது என்று தாங்கள் உத்தரவு போட்டிருப்பதாகவும் அமெரிக்கா தெரிவித்தது. ஆனால் அது நடைபெறவில்லையென்பது பின்னர் அமெரிக்காவுக்கும் தெரியும்.

சீனாவுடன் இந்தியா சமாதான சகவாழ்வுக் கொள்கையை அனுஷ்டித்துவந்தபோது அமெரிக்காவுக்காக சீனாவுடன்வெறுப்புக்கொண்டிருந்த பாகிஸ்தான், பின்னர் சீனா, இந்திய மண்ணில் 'அகலக் கால்' வைத்து இந்தியாவின் நட்பை முறித்துக்கொண்டதும் 'உனது எதிரி. எனது நண்பன்' என்ற முறையில் சீனாவுடன் நட்புக்கொண்டது. இதனால் அமெரிக்காவிடம் உதவி பெற்ற அதே சமயம், சீனாவிடமும் அது உதவிபெற்றது.

ஓர் எல்லையில் சீனாவின் தொல்லையும்மற்றோர் எல்லையில்பாகிஸ்தானின்பயமுறுத்தலும் ஏற்படவே இனியும் 'சமாதான சகவாழ்வு' சரிப்படாது என்ற நிலை இந்தியாவுக்குஏற்பட்டது. ''இந்தியா தனதுநாட்டையும் ஜனநாயக சுதந்திரத்தையும் பாதுகாத்துக்கொள்ள உதவிதாருங்கள்'' என்று அது வேண்டுகோள்விடுத்தது. உலகநா[illegible] கள் [illegible] முன் [illegible] வந்தன. 'கம்யூனிஸ ஆக்கிரமிப்பிலிருந்து எந்தநாட்டையும்பாதுகாக்கும்' ஆபத்பாந்தவனாக' விளங்கும் அமெரிக்காவும் இந்தியாவுக்குஉதவியளிக்கமுன்வந்தது.

அதாவது1962-ம்ஆண்டில்தான் இந்தியா அமெரிக்காவிடமிருந்துஇராணுவஉதவி பெற்றது, 1965-ம் ஆண்டில் இந்த உதவி நிறுத்தப்படும் வரை சுமார் எட்டுக்கோடி டாலர் பெறுமதியான இராணுவஉதவியையே இந்தியா பெற்றிருக்கிறது. பாகிஸ்தான் பெற்ற அளவு உதவி மட்டுமல்லசிறந்தபோர்ச்சாதனங்களையும் இந்தியாபெற்றிருக்கமுடியாது.

### சண்டைக்கு தயாராக வசதி

1965-ம் ஆண்டில் இந்தியாவுக்கும்பாகிஸ்தானுக்கும் ஏற்பட்ட சண்டையில் அமெரிக்காவிடமிருந்து பாகிஸ்தான் பெற்ற இராணுவசாதனங்களில் ஒன்றான 'டாங்கிகள்'பல இந்தியத் தாக்குதலில்பலத்தசேதமடைந்தன. அந்தச் சண்டையில் அமெரிக்கடாங்கிகள்எப்படிச்சேதமடைந்தன என்பதுபற்றி அமெரிக்கஅதிகாரிகள் அந்த டாங்கிகளைப் பார்வையிட்டு ஓர் ஆராய்ச்சியையே செய்தனர். இந்தச் சண்டையைத் தொடர்ந்துஇந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் அளித்துவந்தஇராணுவ உதவியை அமெரிக்காநிறுத்திக்கொண்டது. இனியும் தொடர்ந்து உதவியளிப்பதில்லையென இப்பொழுது அதுமீண்டும் தீர்மானித்திருப்பதும் நல்லதே. ஆனால்முன்னர்வழங்கப்பட்டஇராணுவ சாதனங்களுக்குத் தேவையான உதிரிப்பாகங்களை விற்பதற்கு இருந்துவந்த கட்டுப்பாட்டை நீக்கியதன் அர்த்தம் என்ன? சேதமடைந்த போர்ச்சாதனங்களை பாகிஸ்தான் மீண்டும்திருத்திக்கொள்ள வாய்ப்பளிப்பதாகாதா? அமெரிக்காவின் இத்தீர்மானம்இந்தியாவுக்கு அச்சத்தையும் அமெரிக்காவின்மீது சந்தேகத்தையும் ஏற்படுத்துவதில் என்ன தவறு? இப்படித்தான் இந்திய உபகண்டத்தில் அமைதியை நிலைநாட்டுவதா?

அமெரிக்கா உதிரிப்பாக வியாபாரம்செய்து ஒரு ஜனநாயக நாட்டிற்கு அதிக கஷ்டத்தை ஏற்படுத்துவதைவிட, ஜனநாயகத்தைப்பாதுகாப்பதற்காக தான் கொடுத்த இராணுவச் சாதனங்களையே பழைய இரும்பு விலைக்கு வாங்கிவிடலாமே!

பாகிஸ்தான் தனது இராணுவச் செலவைக் குறைக்க முன்வந்தால் இந்தியாவும் தனது இராணுவச்செலவைக் குறைக்கத் தயாராக இருக்கிறது என்று பாகிஸ்தானுக்கு இந்தியா தெரிவித்த யோசனையை பாகிஸ்தான் 'காஷ்மீர் பிரச்னை தீராதவரை அதுசாத்தியமில்லை' எனக் கூறி நிராகரித்துவிட்டது. இந்தியாவின் பொருளாதார நிலை மோசமாக உள்ளஇச்சமயத்தில் 'உதிரிப்பாக விற்பனை' தீர்மானம் இந்தியா தனது இராணுவச் செலவை அதிகரிக்கவே வழிவகுக்கும். அமெரிக்காவுக்கு இது தெரியாத விஷயமா?

# காமராஜர்-இந்திரா வேறுபாடு ஜனாதிபதி தேர்தலில் தெளிவற்ற நிலை

### இந்திய ஜனாதிபதி தேர்தல்

இந்திய ஜனாதிபதிதேர்தல் அடுத்த மாதம் அதாவது மே மாதம் 6-ந் திகதி நடைபெறவிருக்கிறது. இந்தப்பதவியில் தொடர்ந்திருக்க விருப்பமில்லை என்று முன்னரே தெரிவித்திருந்தாலும் பலரும் மீண்டும் வற்புறுத்தியதால் சிறிதுமனம்மாறிய டாக்டர் ராதா கிருஷ்ணன், 'சில நிகழ்ச்சிகள் சம்பந்தமாக ஏற்பட்ட அதிருப்தி' காரணமாக மீண்டும் ஜனாதிபதி பதவிக்கு போட்டிக்கு நிற்பதில்லை என திட்டவட்டமாக அறிவித்து விட்டார். இப்பதவிக்கு காங்கிரஸ் அபேட்சகராக இப்போதைய உப ஜனாதிபதி டாக்டர் ஸாகீர் ஹுசெயினும் எதிர்க்கட்சி அபேட்சகராக இந்தியபிரதமநீதியரசராக பதவி வகித்து இப்பொழுது ராஜினாமாச்செய்துள்ள திரு. கே. சுப்பாராவும் போட்டியிடுகின்றனர். இவர்களிருவரும் தவிர மேலும் பதினைந்துபேர் இப்பதவிக்குப் போட்டியிடுகின்றனர். உபஜனாதிபதி பதவிக்கு திரு. வி. வி. கிரி (காங்கிரஸ்)யும் அலிகார் பல்கலைக்கழக சரித்திரப் பேராசிரியர் ஹபீபும் போட்டியிடுகின்றனர். ஜனாதிபதி பதவிக்கு டாக்டர் ஸாகீர் ஹுசெயின் தெரிவு செய்யப்படக்கூடுமென்னினும் காங்கிரஸார் ஒரு முகமாக முயற்சி செய்து டாக்டர் ராதாகிருஷ்ணனையே மீண்டும் போட்டிக்கு நிறுத்தியிருந்தால் அவருக்குக் கிடைக்கக்கூடிய ஆதரவைவிட டாக்டர் ஸாகீர்ஹுசெயினுக்கு ஆதரவு குறைவாகவே கிடைக்கமுடியும்.

ஜனாதிபதி பதவிக்கு காங்கிரஸ் சார்பில் யாரைநிறுத்துவது என்பதில் காங்கிரஸ் அக்ராசனர் திரு. கே. காமராஜருக்கும் பிரதமர் திருமதி இந்திராகாந்திக்கும் கருத்துவேற்றுமை ஏற்பட்டு அது பெரிதாக வளர்ந்தது. இதை எதிர்க்கட்சியினர் சரியாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றனர். ஜனாதிபதி பதவிக்கு திரு. சுப்பராவ் தெரிவுசெய்யப்பட்டால் அது எதிர்க்கட்சியினருக்கு மட்டுமல்லாது சுதந்திராக்கட்சிச் செயலாளர் எம். ஆர். மஸானிக்கு கிடைத்த பெருவெற்றியாகவே இருக்கும். இது காங்கிரஸின் உட்பூசலுக்கும் ஓர் எடுத்துக்காட்டாக இருக்கும்.

## மத்திய-ராஜ்ய தொடர்புகள்

### புதுடில்லியில் கருத்தரங்கு

புதுடில்லி, ஏப்ரல் 15

மத்திய-ராஜ்ய அரசாங்கங்களுக்கிடையேயான தொடர்புகள் பற்றிய கருத்தரங்கு ஒன்று இன்று இங்கு ஆரம்பமாகியது. இந்தக் கருத்தரங்கு இன்றும் நாளையும் நடைபெறும். இந்திய [illegible]ஞர் சங்கம் இதனை ஒழுங்கு செய்துள்ளது.

''லேடன்'' தயாரிப்புக்கள் LEYDEN
○ பெனியன்
○ ஸ்போட் சேட்
○ ரி சேட்
ரெறி சேட்
○ ரெறி பிளவுஸ்
○ பேபி வெஸ்ட்
○ கால் மேஸ்
(Nylon & Cotton)
லேடன் காமென்ஸ்
74 A, கே. கே. எஸ். ரேட், யாழ்ப்பாணம்.
போன்: 330

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகத்தில் வாதவூரரின் வாழ்க்கைக் குறிப்புகள்

— த. இராமநாதபிள்ளை, பி. ஏ. (லண்டன்) —

''நீக்கி முன்னென்னைத் தன்
ஞெடு நி(ல்)லாவகை
குரம்பையிற் புகப் பெய்து''
— அதிசயப்பத்து.

இவ்வகச்சான்ருல் வாதவூரடிகளுடைய பிறப்புப் பற்றி ஒன்றுந் துணியவியலாது. அடியார்கள் தாம் முதல்வனேடு இருந்து யாதோ மகாநோக்கமுடையவராய் இவ்வுலகில் பிறந்து வாழ்ந்து தம் நோக்கம் நிறைவேறியபின் இறைவனைத் தாம் அடைவர் என நம்புதல் வழக்கம். இவ்வகச்சான்று மணிவாசகருடைய நம்பிக்கையைக் கூறுகின்ற தொழியப் பிறப்பைப்பற்றி ஒன்றும் கூறவில்லை எனலாம். இதனைத் தொடர்ந்து மணிவாசகர் முன்பு குடமுழாத்தட்டும் நந்தீசனுயிருந்தார் எனவும், பின்பு மணிவாசகராகப் பிறந்தாரெனவும் சிலர் கருதுவர். இதற்கு ஆதாரமாக 'குடமுழநந்தீசனை வாசகனுகக் கொண்டாய்' எனத் திருநாவுக்கரசுநாயனுர் கூறியதை எடுத்துக்காட்டுவர்.

திருநாவுக்கரசர் கி. பி. ஏழாம் நூற்ருண்டினர் என்பதும், மணிவாசகர் கி. பி. ஒன்பதாம் நூற்ருண்டினர் என்பதும் இன்று ஆராய்ச்சி வல்லோரால் தெளியப்பட்டுள. மேலும் வாசகன் என்பது மணிவாசகரைச் சுட்டுமென உரைக்கவியலாது. நந்தீசன் குடமுழாவை இறைவன் முன்னிலையில் வாசித்தல் உண்டு என்பதையே சுட்டியிருக்கலாம். நந்திபெருமானுக்கு வாயில் காத்தலும் குடமுழாவாசித்தலும் சிவஞானம் உபதேசித்தலும் எனக் கடமைகள் பல இருந்தன என்பது யாவர்க்கும் உடன்பாடே. மேலும் வாதவூரருடைய அவதாரத்தைக் கூறும் பரஞ்சோதி திருவிளையாடல், நம்பி திருவிளையாடல், திருப்பெருந்துறைப்புராணம் என்பவை ஒரு கணத்தலைவரே வாதவூரடிகளாக அவதரித்தார் எனக் கூறும்.

கல்விபற்றிய அகச்சான்று இல்லை.

மணிவாசகர் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள் நான்கினையும் விளக்குகின்ருராகலின், திருவாசகம் அருளியவர் பல் கேள்வித் துறைபோகிய கலைவல்லோர் என்பது கூருமலே அமையும். மணிவாசகர் முதல்வனை அறிதற்கே கல்வி பயின்ருரொழியக் கல்வியால் பொருளீட்டவேனும் இன்பம் விழையவேனும் கற்கவில்லையெனக் கருதலாம்.

'கற்றதனு லாய பய
னென்கொல் வாலறிவ
னற்ரு டொழாஅ ரெனின்'

இறைவனை வழிபடுதற்காகவே கல்வி பயிலப்படுமென்பது திருவள்ளுவநாயனுர் கருத்தாகும். அடியார்கள் புகழ் பெறுதற்குக் கல்வி பயிலார். இக்கருத்தையே மணிவாசகர் போற்றித் திருவகவலில் 'கல்வி என்னும் பல் கடற்பிழைத்தும்' என எழிலுறக் கூறினர். ஒரு கலைகற்ருேர் பிறிதொரு கலை கற்க விரும்புதலும் ஒரு மொழி கற்ருேர் பிறமொழிகளைக் கற்க விரும்புதலும் ஒன்றனையே மேன்மேலும் கற்க விரும்புதலும் உலக இயல்பு. கல்வி கரையிலவாகலின், கல்வி எனும்பெளவத்தில் அமிழ்ந்து வருந்துதலொழியக் கல்விக்குக் கரை காணவியலாது என்பது துணியப்படும்.

மணிவாசகர் இல்லறத்தில் சில காலம் இருந்தனரென உரைத்தல் உண்டு. இதற்கு ஆதாரமாகக் கீழே தரப்படும் விருத்தத்தைக் காட்டுதல் உண்டு.

''முடித்த வாறும் என்றனக்கே தக்க தேமுன்னடி
யாரைப்
பிடித்த வாறும் சோராமற் சோர னேனிங் கொருத்தி
[illegible] வாய்
துடித்த வாறும் துகிலிறையே சோர்ந்த வாறும்
முகங்குறுவேர்
பொடித்த வாறுமிவை
யுணர்ந்துகேடென் றனக்கே
சூழ்ந்தேனே''
—திருச்சதகம் 57

சிற்றின்பத்தை வெறுக்கும் நிலையில் இருந்த மணிவாசகர் சிறிது ஐம்புலப்பற்று அடைந்தனர் போலும். இச்செய்யுளை ஆதாரமாகக் கொண்டு வாதவூரர் இல்லறம் நடாத்தியிருந்தனர் எனக் கொள்ளவியலாது.

'முடையார் புழுக்கூடிது காத்திங்கிருப்பதாக முடித்தாயே' எனஇதற்குமுன் மணிவாசகர் இசைத்தமையால், அவர் மாயாதனுவை ஓம்பியிருந்தனர் எனவும் அவ்வாழ்க்கையும் இறைவனுடைய விருப்பத்தின்படியே நடைபெற்றதெனவும் அறியப்படும். இம்மாயாவாழ்க்கையில் தாம் இணைவிழைச்சினுல் உந்தப்பட்டுக்கெடு நெறியிற் செல்ல நினைத்தார் எனக் கவல்கின்றனர்.

**நூல் இயம்புவோருடைய வாழ்க்கைக் குறிப்புக்கள் அவர்தம் நூலின்கண் ஆங்காங்கே கிடைத்தல் கூடும். திருவாசகப் பாடல்களில் மணிவாசகருடைய வாழ்க்கைக் குறிப்புக்களைத்தரும் அகச்சான்றுகள் உள எனச் சிலர் சொல்லுவர். அவ்வகச்சான்றுகள் எத்தன்மைய என ஆராய்தலே இக்கட்டுரையின் நோக்கமாகும்.**

ஒரு மங்கையின் காதல் தன் உள்ளத்தைக் கவருந் தன்மையதாக இருந்ததெனவும் அதனுல் தாம் வருந்தினர் எனவும் மணிவாசகர் கூறினர் போலும்.

மக்கள் யாவரும் இணைவிழைச்சால் வருந்துதல் உண்டென்பதை வாதவூரடிகள் நன்கு உணர்ந்தமையால் விழைச்சைக் கடிய வேண்டுமெனப் பல பாடல்களில் கூறிப்போந்தார்.

கருங்குழற் செவ்வாய்
வெண்ணகைக் கார்மயில்
ஒருங்கிய சாயல்
நெருங்கியுள் மதர்த்துக்
கச்சற நிமிர்ந்து
கதிர்த்து முன்பணைத்
தெய்த்திடை வருந்த
எழுந்து புடைபரந்
தீர்க்கிடை போகா
இளமுலை மாதர்தங்
கூர்த்த நயனக்
கொள்கையிற் பிழைத்தும்
— போற்றித் திருவகவல்

[illegible]வனப்புடை மாதர் நோக்குக் கொல்லுந் தன்மைத்து என அடிகள் உரைத்தனர்.

ஊறு ஞானத்
துயர்ந்த வராயினும்
வீறு சேர்முலை மாதரை
வெல்வரோ
— பூக்கொய்படலம்
ராமாயணம்.

இணைவிழைச்சை வெல்லுதல் அரிதெனக் கம்பநாடர் இனிது உரைத்தனர் அல்லவா? மணிவாசகப்பெருமானும் சிற்றின்பம் விழைததால் சுகமில்லை என்பதை உணர்ந்தே வீட்டின்பம் தேடுவாராயினர்.

வணங்கும் இப்பிறப்
பிறப்பிவை நினையாது
மங்கையர் தம்மொடும்
பிணைந்து வாயிதழ்ப்
பெருவெள்ளத் தழுந்தி
நான் பித்தனுய்த்
திரிவேனைக்
குணங்க ளுங்குறி
களுமில்லாக் குணக்கடல்
கோமளத் தொடுங்கூடி
அணைந்து வந்தெனை
ஆண்டுகொண் டருளிய
அற்புதம் அறியேனே.
— அற்புதப்பத்து

''பஞ்சாய அடிமடவார்
கடைக்கண்ணால்
இட்டிட்டு''

''கொந்துகுழல் கோல்வளை
யார் குவிமுலைமேல்
வீழ்வேனை''
''தையலார் மையலிலே
தாழ்ந்துவிடக் கடவேனை''
''காதலின்மிக் கணியிழை
யார் கலவியிலே
விழுவேனை''
— அற்புதப்பத்து

''செப்பு நேர்முலை
மடவர லியர்தங்கள்
திறத்திடை நைவேனை
... அடியாரிற் கூட்டிய
அதிசயங் கண்டேனே''
—அதிசயப்பத்து.

இணைவிழைச்சின் வலிமையை இவ்வண்ணம் மணிவாசகர் வருணிப்பதால், மணிவாசகர் காமத்தில்கழிபேருவகை உள்ளவர் எனக் கருதவியலாது. இனிஐம்புலவின்பத்திலிருந்து எப்போது விடுதலை பெறுவேன் என அடிகள் அலறுதலைக்காண்க.

ஆற்ற கில்லேன் அடியேன்
அரசே அவனி தலத்தைம்
புலனுய
சேற்றி லழுந்தாச் சிந்தை
செய்து சிவனெம்
பெருமான் என்றேத்தி
ஊற்று மணல்போனெக்கு
நெக் குள்ளே
உருகி ஓலமிட்டுப்
போற்றி நிற்ப தென்று
கொல்லோ என்பொல்லா
மணியைப் புணர்ந்தே
— புணர்ச்சிப்பத்து.

வாதவூரடிகள் நாயிற் கடையோனுகிய தம்மை இறைவன் ஆண்டுகொண்டதைப் பல முறை கூறுதலால் அவற்றினை எடுத்துக்காட்டுதல் அனுவசியமாகும். அடிகள் இளமையில் சிற்றின்பப் பற்று உள்ளவராக இருந்திருக்கலாம். அடிகள் புலமை மிக்கவராகலாலும் உயர்ந்த இலட்சியம் உடையவராகலாலும் தம் சிற்றின்பப் பற்றைப் பெருப்பித்துக் காட்டுகின்றனர் எனலாம். இங்ஙனம் புலமை மிகுந்து அகப்பொருட்சுவை ததும்பப் பாடுதலால் வாதவூரடிகளைக் காமத்தில் அளவுகடந்தவர் எனக் கருதற்க. நாயிற் கடையேன் என அடிகள் கூறுதலான் அவர் பொது மக்கள் போல் தீத்தொழிலுடையவர் எனக் கருதல் பெரும் பிழையாகும்.

இனி மாணிக்கவாசகர் பாண்டியனுக்கு அமைச்சனுகக்கடமையாற்றினுர் என்பதற்கு அகச்சான்று இல்லை.

நரியைக் குதிரை யாக்கிய
நன்மையும்
ஆண்டுகொண் டருள
அழகுறு திருவடி
பாண்டி யன்தனக் குப்பரி
மாவிற்
றீண்டு கனகம் இசையப்
பெறுஅ
தாண்டான் எங்கோன்
—கீர்த்தித்திருவகவல்

ஒருங்குதிரை உலவுசடை
உடையானே நரிகளெல்
லாம்
பெருங்குதிரை ஆக்கியவா
றன்றேஉன் பேரருளே
—திருவேசறவு.

நரியைக் குதிரைப்
பரியாக்கி ஞாலமெல்
லாம் நிகழ்வித்துப்
பெரிய தென்னன் மதுரை
யெல்லாம் பிச்ச தேற்
றும் பெருந்துறையாய்.
—ஆனந்தமாலை.

அரியொடு பிரமற் களவறி
யாதவன்
பரிமா வின்மிசைப்
பயின்ற வண்ணமும்...
-கீர்த்தித்திருவகவல்

கண் சுமந்த நெற்றிக்
கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண்
டக்கோவால் மொத்
துண்டு
புண்சுமந்த பொன்மேனி
பாடுதுங்காண் அம்மா
னுய்.
-திருவம்மானை

இம்மேற்கோள்கள் எல்லாம் கண்ணுதற் பெருங்கடவுளின் திருவிளையாடல்களை வருணிக்கும் புராணக்கதைகளையே சுட்டும். நரியைப் பரியாக்கியகதை பிட்டுக்கு மண்சுமந்த கதை என்பவை சைவப்புராணங்களில்பண்டு தொட்டுக் கூறப்படும். இவற்றை மணிவாசகர் முதன்முதற்கூறவில்லை, மணிவாசகர் தன் பொருட்டு இவை செய்யப்பட்டன என உரைக்கவில்லை. திருநாவுக்கரசு நாயனுரே ''நரியைக் குதிரை செய்வானும்'' எனப் பாடியுள்ளார். பிற்காலத்துப் புராணகாரர் இப்புராணக் கதைகளை மணிவாசகரோடு சம்பந்தப்படுத்தி மணிவாசகர் புராணம் இயம்பினர் போலும்.

இனி நரியைக்குதிரையாக்கியகதையிலிருந்துசிலகாலத்தில் வேதங்கள் ஓசை நலங்குன்ற பாடப்பட்டவை என்பதும் பின்பு திருத்தமுறப் பாடப்பட்டவை என்பதும்

[8-ம் பக்கம் பார்க்க]

## சிறுகதை

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

என்னைப் போன்ற மனப்பான்மையை ஒவ்வொருவரும் வளர்க்கவேண்டும். அப்படி வளர்த்தால், இந்த நாட்டில் என் தாய்த்திருநாட்டில்- பிச்சைக்காரர் என்ற ஒரு இனமே இல்லாமலொழிந்துவிடும். இது ஒன்றேயொன்றுதான் என் கடைசி ஆசை.''

-இப்படியெல்லாம் அந்தப் பிச்சைக்காரன் பேசவில்லைத்தான். அவன் எவ்வண்ணம் பேசமுடியும்?

அவன்தான்- அந்தத் தியாகத்தின் திருவுருவந்தான்- துளியும் சுயநலங்கலவாத, பிரதிபலன் கருதாத, புகழ் விரும்பாத, மனிதனுக்கு மனிதன் செய்யவேண்டிய கடமையைச் செய்து, கடமையின் பலனுக மீளாத் துயிலில் ஆழ்ந்துவிட்டானே!

[யாவும் கற்பனை]







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறு

தாகம். தாங்க முடியாத தாகம்.

நா எப்போதோ உலர்ந்து நரம்பெல்லாம் சோர்ந்து நேரிய நிலையாய் நிற்க இயலாதவனாய் விட்ட ஒருவன் அவன். புலன்கள் சுழல்கின்றன எனினும்தவிப்பொன்று நின்று அவனைத் தாக்கியும், ஆக்கியும் வருகின்றது. எழுந்திட அவன் உந்துகிறான். துடிப்பாய் அது முடிகிறது. அவ்வளவே.

அது யாத்திரிகர் கூட்டம். அதிற் கொண்ட தவிப்பே அவனது உள்ளத்தின் உள்ளுணர்வாய் நின்று உந்துகிறது. இறுதி என்ற உறுதிப் பாடாய் வளர்கிறது. ஆனால் உடனே தரையிற் கிடந்து மடிகிறது. அது எழுந்த பாடில்லை.

சுற்றிலுள்ளோர் திகைக்கின்றனர், விழிக்கின்றனர். அது யாத்திரிகர் கூட்டம்; ஆனால் பிரயாணிகளாய்விட்டவர்கள் அவர்கள். அக்கொடுமணற் பரப்பில் முன் செல்ல இயலாது, வேண்டியதும் அல்ல, பின் சென்று திரும்பிடின் போதும் என்ற உணர்வு அவர்களை ஆட்கொண்டுவிட்டது. எனினும் அவனை எது செய்வது?

அவன் தரையில் கிடக்கிறான். உயிர் ஊசலாடுகிறது. நிலை தன்னுட் தெரிகிறது. இவ்விதம் துவண்டு முடிவதா? முடிவு இதுதானா? இதுதானா?

உணர்வு அமுங்கி எழுகிறது. புரளவும் இயலவில்லை. இறப்புப் போலும். எனினும், இறுதி மூச்சும் முன் சென்றே முடியும். உறுதி இது. எனினும்..... ஐய, எண்ணி விழைந்த காட்சி தான் எங்கே? அதனைக் காணாது மறைவதா? அடையாது செல்வதா? கண்கள் நீர் துளிர்க்கின்றன.

இயற்கை தூரத்தே நின்று இளநகை புரிகிறாள். அங்கு நீர் நிறைந்த காட்சி! உயிர்கள் உளம் மகிழும் காட்சி! இன்பக் காட்சியே அங்கு என்றென்றும்! அந்தப் பேராற்றினை எவரும் பெயர்த்துச் செல்ல முடியாது. தூக்கிப் போகவும் இயலாது. ஆயினும் விரல்களைந்தையும் சேர்த்திட அவை இணைந்துஉட்குவியும், நீரினைக்கோலலாம், கொள்ளலாம், குடிக்கலாம், எதுவும் செய்யலாம். ஆனால்

அந்தத் தாக மனிதனுக்கு அந்த ஆறும், நீரும்எட்டுமா? அவன் களைத்து அறிவிழந்து கிடக்கிறான். தவிக்கின்றது உள்ளம். சூன்யம் மின்னி மறைகின்றது. எதுவும்தெரியாத நிலை....

யாரோ ஒரு சீவன், எதுவுமற்ற வள்ளல், அவ்வேளை வருகிறது. அதன் கையில் ஒரு பாத்திரம். அதில் வேறெதுவும் இல்லை, நீர் தான். அந்நீர் அம்மனிதனின் நாவை நனைக்கிறது. துளிகள் கசிந்து உட்செல்கின்றன. உயிரை மீட்கின்றது அந்தத் துறவியின் தண்ணீர். களைப்பு மறைகிறது.

அவன் கண் விழிக்கிறான். பார்க்கிறான்.

''தாங்கள் யார்?'' அவன் இதயக் குரல்கொண்டு கேட்கிறான்.

''இது ஆற்றுநீர் அப்பனே.'' -துறவியின் பதில் இது. பார்த்தவர் பார்த்து நிற்க, வந்தவர் மறைந்திடுகிறார். அவன் மட்டும் எழுகின்றான்.

''நீ ஆற்றுநீரல்ல, ஆறே தான்! ஆறேதான்!'' என முணுமுணுக்கிறது, அவனது உதடு. ஓங்காரமிடுகிறது இதயம். அவன் செல்கிறான், செல்கிறான். எதுவோ செலுத்துகிறது.

—க. பத்மநாதன்

## இவ்வாரச் சிறுகதை

# தியாகி

**— எஸ் எல். சவுந்தரநாயகம் —**

பஸ் நிலையத்திலே—

''ஐயா சாமீ...'' என்று குரலெழுப்பியவனாக வாயெல்லாம் பற்களாக இளித்துக்காட்டி ஒவ்வொரு பிரயாணிகளிடமும் யாசகம் கேட்டான், இந்நாட்டு மன்னர்களிலொருவன்.

'சில்லறையில்லையப்பா' வென்று வாயைத் திறந்து சொல்லித் தப்பிக்கொண்டனர் சிலர். வாயைத்திறக்காமலே 'இல்லை' யென்பதற்கடையாளமாகத் தலையை யாட்டித் தப்பிக்கொண்டனர் வேறுசிலர்.

பேச்சு, நடிப்பு எதுவுமின்றி மௌனம் அநுஷ்டித்துத்தப்பித்துக்கொண்டனர் இன்னும் சிலர்.

''இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின்
பரந்து கெடுக உலகியற்றி யான்''

என்கிற குறளைச் செயலில் கடைப்பிடித்து ஒழுகுபவர்களைப்போல...

''ஐயா சாமீ... தர்மங் கொடுங்கையா... உங்க புள்ளைகுட்டியளுக்குப் புண்ணியங்கிடைக்கும்...''--பிச்சைக்காரன் கேட்டபடியே நடை பயின்றுகொண்டிருந்தான்.

அவனுடைய தொழிற்திட்டப்படி கேட்கவேண்டியது கடமைதானே...

'பாக்கட்'டிற்குள் கையை விட்டு ஓர் இரண்டுசத நாணயத்தைப் பக்குவமாயெடுத்து, இரண்டுசத நாணயமென்று பிறர் கண்டுகொள்ளமுடியாத வகையில் வைத்துக்கொண்டு, சந்தர்ப்பத்தைத் தவறவிடாமல் பிச்சைக்காரன் நெருங்கிவரும் பொழுது, அவனுடைய பேணிக்குள் கணீரென்று ஓசையெழும்பக்கூடியதாகப் போட்டுவிட்டான், ஓர்நாகரீக இளைஞன்.

இளைஞனுடைய நெஞ்சிலே ஒரு திருப்தி...வதனத்திலே ஒரு பெருமிதம்... வாயிலே ஒரு மௌனப் புன்னகை...தான் 'பாரிவள்ளல்' பரம்பரையிற் தோன்றியவனென்பதைப் பலபேரறிய சாதனையிற் காட்டிவிட்ட மகிழ்ச்சி... 'ஷேர்ட்' கலரைத் தூக்கிவிட்டுக்கொண்டான்.

இந்த 'ரொக்கட்' யுகத்திலும் தர்மம் வாழத்தான் செய்கிறதென்ற நம்பிக்கையின் பிரதிபலிப்பை முகபாவத்தாற்காட்டி, வரட்டுப் புன்னகை மூலம் நன்றிக்கடனைத் தெரிவிக்கவில்லை அந்த யாசகன்.

பணத்தைக்கொண்டு மனிதனை மதிப்பிடும் சமுதாயத்திலே இரண்டு சதத்துக்காவது நன்றி காட்டுவதாவது?

மானுபிமானங்கள் செத்து உணர்ச்சிகள்வரண்டு உள்ளம் மரத்துப்போன- 'மரப்பாவை' யைப்போல- அவன் சுற்றிக்கொண்டே திரிந்தான்...

''ஐயா புண்ணியவானே! சாமீ...'' என்று வேறொருவரைக்குறிவைத்து நசரிக்கத்தொடங்கினான் அந்தப் பிச்சைக்காரன்.

அந்த ஒருவர், இரவலனின் குரலைக் கணக்கெடுக்கவில்லை... அதற்கு அவருக்கு நேரமுமில்லை.

அவர்—

நீண்டகால இடைவெளிக்குப்பின் பஸ் நிலையத்திலே எதிர்பாராமற் சந்தித்த— தனக்குப் பரிச்சயமான— இரண்டு இளம் பெண்களைக் குசலம் விசாரிப்பதிலும், அவர்களுக்குத் தலா ஒவ்வொரு கிளாஸ் 'கூல்ட்றிங்' கோஅல்லது ஹொட் ட்றிங்கோ வாங்கிக்கொடுக்கப் பகீரதப் பிரயத்தனம் பண்ணுவதிலும், அறுபட்ட பல்லி வாலைப்போல துடித்துக்கொண்டு நின்றார்.

''இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம்
விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு''

என்னும் இலக்கணத்திற்கு இலக்கியமாக அவதரித்தாரைப் போன்று பம்பரமாக நின்று சுழன்றார்.

பிச்சைக்காரனும் விடவில்லை. 'சதையை அறிந்து கத்தி வைக்கும்' தொழில் நுட்பக்கலையிற் கைதேர்ந்தவிடாக்கண்டனாயிருக்க வேண்டும்... பேணிக்குட்கிடந்த சில சில்லறை நாணயங்களைக் குலுக்கிக் குலுக்கி ஒலி ஜாலம் பண்ணியவனாக 'தொரே தொரே!' என்று அந்த மனிதரையே வலம் வரத் தொடங்கினான்.

தன்னுடைய கஞ்சத்தனத்தை சிறப்பாக எல்லோருக்கும் குறிப்பாகஅந்த இளநங்கையரிருவருக்கும் காட்ட விரும்பாத அந்தக் கொடாக்கண்டர் இலேசில் விட்டுக்கொடுப்பாரா? அவசரகாலச் சட்டமும் தளர்த்தப்பட்டிருக்கும்பொழுது...

சுடச்சுட, 'இந்த நாட்டிலிருந்து பிச்சைக்காரரை ஒழிப்பதெப்படி?' என்கிறவொரு கருத்தரங்கத்தை ஆரம்பித்துவைத்துத் தலைமைப் பேருரை நிகழ்த்தத் தொடங்கிவிட்டார்... சிலர் விவாதத்தில் பங்குபற்றிச் சொற்பெருக்காற்றினார்கள்.

என்னதான் இரந்துயிர் வாழ்வதென்றாலும் 'தன்மானம்' இல்லாத மனிதன் இருப்பானா? பிச்சைக்காரன் மெல்லநழுவிவிட்டான்.

பிச்சைக்காரன் அவ்விடத்தை விட்டகன்றதை அவதானித்த அந்த மனிதர் வெற்றியின் இமயத்தில் போய் நின்றார்.

பேச்சு சுவாரஸ்யத்திலே கண்டிப்பாக ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டியவொரு விஷயத்தைக் கூட அந்த மனிதர் அடியோடு மறந்துவிட்டார்...

ஃ ஃ ஃ

பஸ்நிலையத்திற்குச்சற்றுத் தொலைவிலே—

வாயுவேகம் மனோவேகமாய்ப் பறந்து சென்றது ஒரு கார்... நகரசபை எல்லைக்குள் ஓடும் 'ஸ்பீற்லிமிற்' றைக் கொஞ்சம் மீறிய வேகம் போல...

சுமார் ஐந்தாறு வயசு மதிப்பிடக்கூடியவொரு சிறு பையன்-படுசுட்டிப் பயலாக இருக்கவேண்டும்-ஓடும் காருக்குக் குறுக்கே பாய்ந்தான். நிழல்போலே பையனைத் தொடர்ந்து ஒரு பிச்சைக்காரனும் பின்னால் பாய்ந்தான்...

கிறீச்...! மின்னல் பளிச்சிட்டாற் போலிருந்தது.

சாரதி தன் திறமை முழுவதையும் பிரயோகித்து 'ப்றேக்' போட்டான். அப்படியிருந்தும் பையனுக்குப் பின்னாலோடிய அந்தப் பிச்சைக்காரனின் நெஞ்சுக்கு மேலால் முன் சில் ஏறி இறங்கிய பிறகுதான் கார் நிறுத்தப்பட்டது.

முழுமூச்சாக பிச்சைக்காரனால் பிடித்துத்தள்ளப்பட்ட சிறுவன் மயிரிழையில் உயிர் தப்பிவிட்டான். தெருவில முகங்குப்புற விழுந்ததினால் சருமத்தோல் சிற்சில இடங்களில் எடுபட்ட காயங்களினால் இரத்தம் பொசியத் தொடங்கியது. வேறுபெரிய காயங்களுமில்லை. பிராண சங்கடமுமில்லை. பையனுக்கு ஒரு மாபெரும் கண்டம் தவறிவிட்டது.

பிச்சைக்காரன் நிலை-?

கவலைக்கிடமாகும் போலிருந்தது...பிச்சைக்காரன் அறிவற்றவனாக [illegible] இரத்த வெள்ளத்தில் மிதந்து கிடந்தான்...

பொலிஸ்காரர், அவர் இவர் என்று ஒரு மாபெரும் சனசமுத்திரமே அவ்விடத்தில் திரண்டுவிட்டது...

பிச்சைக்காரர் ஒழிப்புக் கட்சித்தலைவரும்- ஆமாம், பஸ் நிலையத்தில் நின்ற அந்தக் கொடாக்கண்டர்தான்- பரபரப்புடன் சம்பவதலத்துக்குப் பறந்து சென்றார்...

அவருடைய ஊகம் இம்மியுந்தவறவில்லை. குய்யோ முறையோவென்று தலையிலடித்துக் கொண்டார்.

காரில் அடிபடாமல் உயிர் தப்பிய சிறுவனை-அவர் தன்னுடன் கூட்டி வந்த அவருடைய மகனை-தூக்கிக் கொண்டு அழுது பிரலாபித்தார்... தன்னுடைய கவனக் குறைவை நினைந்து மனம் வருந்தினார்...

தன்னுடைய மகனைக் காப்பாற்றுவதற்காக உயிர்த் தியாகம் பண்ண முன்வந்த உத்தமனை யாரென்று உற்றுப் பார்த்தார்...

சற்று முன்பு அவரால் பரிகசித்து நிந்தித்துஉதாசீனஞ் செய்யப்பட்ட சாட்சாத் அதே பிச்சைக்காரன்தான் அந்தத்தியாகி என்று இனங்கண்டு கொள்வதற்கு அவருக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை...

அவர் கருணையின்அவதாரமாக மாறி அவனுடைய தியாகத்தை நினைந்து கழிவிரக்கப்பட்டார்...

பிச்சைக்காரன் திரு திருவென்று விழித்த நிலையில் கிடந்தான்... உயிர் பிரியவில்லை...அவனை உடனடியாக ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோவதற்கு யார் யாரெல்லாமோ ஆயத்தம் பண்ணினார்கள்.

பிச்சைக்காரன் ஒரு சோகப்புன்னகை புரிந்தான்... அந்த மனிதரைக் கூர்ந்து பார்த்தான்...

''என் உயிரைப் போன்ற ஓர் உயிருக்கு-ஓர் இளம்பயிருக்கு-நேரவிருந்த ஆபத்தைத் தடுத்து உதவிபுரிவதற்கு சந்தர்ப்பவசமாகக் கிடைத்த வாய்ப்பை நான் நல்லமுறையில் பயன்படுத்திவிட்டேன். நான்மனிதனாகப் பிறந்ததின்கடமையைநிறைவேற்றிவிட்டேன். வாழ்க்கையில் வெற்றிகண்டு விட்டேன். பூரணதிருப்தியுடன் மரணிக்கப் போகிறேன். எனது ஆத்மா நிச்சயமாகச் சாந்தியடையும்.

[4-ம் பக்கம் பார்க்க]

# உள்ளந் திறந்துவிடு

**—சி. ஆறுமுகம்—**

உள்ளந் துடிக்குதடா!—தமிழா!
உடல் நடுங்குதடா!
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும்—தமிழர்
பாட்டினை யெண்ணிவிட்டால்!
கள்ளங் கருதாதே—தமிழா!
காட்டுன்றன் நெஞ்சத்தினை
தள்ளி விழுத்தி விட்டாய்—தமரைத்
தாழ்த்தி விழுந்து விட்டாய்!

ஃ

தாழ்ந்து பணிந்திறைஞ்சி—நமது
தாய் பெற்ற சேய்கள் சிலர்
வீழ்ந்து கிடந்து நிதம்—தமிழா!
வேதனை வெள்ளத்திலே
ஆழ்ந்து துடிக்கின்றாரே—தமிழா
அவரை வாழவிடு!
வாழ்ந்து வளர்ந் தெழுவாய்—தமிழா!
மதிப்புப் பெற்றிடுவாய்.

ஃ

எத்தனை நாட் பொறுப்பர்?—தமிழா!
எண்ணில் கொடுமை யெல்லாம்
குத்தி வருத்தாதோ?—அவர்தம்
நெஞ்சங் குமுறாதோ!
புத்தி யறிந்து கொண்டால்—தமிழா
புன்மையைப் போக்கிவிடு.
சித்தந் திறந்து விடு—தமிழா
செம்மையைச் செய்துவிடு.

ஃ

பேச்சினிற் பேசிடுவாய்—சமத்துவம்
பின்பு மறுத்திடுவாய்
கூச்சல்கள் போட்டிடுவாய்—தமிழா!
கூட்டங்கள் கூட்டிடுவாய்!
மூச்சு விடுமுன்னே—தமிழா!
முற்றும் மறந்திடுவாய்
சீச்சீ! ஈதென்னே?—தமிழா!
செய்கையிற் காட்டிடுவாய்.

ஃ

ஆயிரம் ஆண்டுகளாய்த்—தமிழா!
அடிமை ஆக்கி நின்றாய்!
தாயில்லாப் பிள்ளைகளோ—தமிழா
தாழ்த்தப் பட்டவர்தாம்?
வாயில்லா மக்களைப் போல்—இனியும்
வாழவும் எண்ணுவரோ?
ஓயு மாறிக் கொடுமை—தமிழா!
உள்ளந் திறந்துவிடு.

ஃ

தாழ்வும் உயர்வு மெல்லாம்—தமிழா!
தசையில் இல்லையடா!
வாழ்வின் உயிரொழுக்கம்—தமிழா!
மறந்து போகாதே!
வீழுந் தமிழினந்தான்—இனியும்
வீணுரைச் சாதி கொண்டால்!
வாழும் வழி யறி வாய்—தமிழா
வையத்தில் ஓர் குலமாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கே. பி. எச். எழுதும் யாத்திரைக் கடிதங்கள் 3

அன்புள்ள சரஸ்,

"தமிழும் ஆங்கிலமும் நன்கறிந்த நான்கு மொழி பெயர்ப்பாளர் தேவை. விண்ணப்பிக்க. மனேஜர், 'தமிழ் நாடு' காரியாலயம், பிராட்வே, சென்னை."

இந்த விளம்பரத்தை சென்னையிலே ஓர் இலவச வாசகசாலையில் இருந்த 'தமிழ்நாடு' தினசரிப் பத்திரிகையில் தற்செயலாகப் பார்த்தேன். சென்னைக்கு ஏன் சென்றேன் தெரியுமா? படிப்பு முடிந்து வேலைக்கு வேட்டையாடும்காலம்அது. இஞ்சினீயராக வரவேண்டுமென்றுதான் படித்தேன்.

ஆனல் நாம் நினைப்பதொன்று நடப்பது வேறு தானே! 'இண்டர் மீடியட்' பரீட்சையில் தேறியதுமே எனக்குப்பெண்பேச ஆரம்பித்து விட்டார்கள். இஞ்சினீயரிங் கல்லூரியில் சேர்ந்து படிப்பதென்ருல் அதிகசெலவாகும். அச்செலவெல்லாம் தந்து படிக்க வைப்பதாக தஞ்சாவூரிலிருந்து ஓர் அப்புக்காத்து அடிக்கடி நம் வீட்டுக்கு வந்தார். அவருடைய பெண்ணைப் பார்க்க [அல்ல என்னை அவர்கள் பார்க்க(?)] அழைத்துச் சென்றனர். ஜாதகமும் பொருந்தி மனமும் பிடித்துவிட்டது. ஆனல் ஒரே குலமாயினும், சாதியிலே வேறு ஓர் உட்பிரிவு. அதனல் என் தாய்க்குச் சம்மதமில்லை.

நம்மிடையே எவ்வளவு சாதிகள்! ஒரு சாதியிலேயே எவ்வளவு உட் பிரிவுகள்! தெலுங்கு பிராம்மணர்களிடையேமட்டும் முல்கிநாடு, காசுலநாடு, வெல்நாடு, வேங்கிநாடு, கர்ணகம்புலு, நியோகி, தோண்டிர வாள்ளு என்று எனக்குத் தெரிந்தவை. தெரியாமல் இன்னும் எவ்வளவோ! விவாகத்துக்கு சாதி மட்டும் ஒன்ருக இருந்தால் போதாது. ஒரே உட்பிரிவாகவும் இருக்க வேண்டும். இந்த உட் பிரிவுகள் எப்போது, எப்படி ஏற்பட்டனவோ தெரியவில்லை. பெயரைப் பார்க்கும்போது, சிற்சில பகுதிகளில்இருந்தகுடும்பங்கள், தங்கள் சமூக பாதுகாப்புக்காகவும் கட்டுப்பாட்டுக்காகவும் ஒவ்வொரு பெயரை வைத்துக்கொண்டு தங்களுக்குள்ளாகவேவிவாக சம்பந்தம் வைத்திருக்க வேண்டும்.

உண்மையிலே இச்சாதிகளிடையே உயர்வு தாழ்வு எதுவுமில்லாவிடினும், ஒவ்வொரு உட்பிரிவினரும்கூட தாங்கள்தான் உயர்ந்தவர்கள் என்று நினைத்துக்கொள்வதுசகஜம். தாழ்த்தப்பட்டவர்கள்என்றுசொல்லப்படுகிறவர்களுக்குள்ளும்கூட எவ்வளவு சாதிகள்! அவர்களும் தங்களுக்குள்ளாகக் கலப்பு மணத்தை விரும்புவதில்லை. தாங்கள்தான் உயர்ந்தவர்கள் என்று கருதி, தங்கள் சாதிக்கட்டுப்பாட்டை பாதுகாக்கின்ருர்கள். உயர்சாதி என்று சொல்லப்படும் பெண்ணை மற்றசாதியைச் சேர்ந்த ஒருவர் கட்டினுலும் அத்தம்பதிகளை இருதரப்பினரும் சமூகத்தில் தள்ளி வைத்துவிடுவர். தாயாருக்குப் பிடிக்காததால், அந்த விவாக யோசனையையும் இஞ்சினீயரிங் படிப்பு யோசனையையும் விட்டுவிட்டு பி. ஏ. வகுப்பில் சேர்ந்து விட்டேன்.

இதற்கிடையே நமதுகுடும்பத்திலே பாகப் பிரிவினை வழக்கு ஒன்று ஏற்பட்டு, உயர்நீதிமன்றம்வரை சென்றது. முடிவில் நம் கட்சி தோற்றதனல், செல்வமும் செல்வாக்குமாக இருந்த நமது பெரிய குடும்பம் சிதைந்து வறுமைக்கும் உள்ளாயிற்று. பி. ஏ. படிக்கவும் வசதி காணுது. படிக்காமலிருப்பின், அந்த வயதில் வேறென்ன செய்வது? கொடிது கொடிது இளமையில் வறுமைஎன்றுஔவைப் பிராட்டியார் பாடியுள்ளாரல்லவா? உண்மை. உண்மை. ஒரு சமயம் பசிக் கொடுமையால், ஒரு புத்தகக் களவும் செய்துவிட்டேன் சரஸ்! தயவு செய்து என்னை வெறுக்காதே. மனமும் கோணல் வழிகளில் செல்ல ஆரம்பித்து படிப்பும் சீர்குலைந்து, பரீட்சையிலும் தோல்வியடைந்தேன். மனம் தப்பு வழி சென்ருல் படிப்பு எப்படி வரும்? பரீட்சைதான் தேற முடியுமா?

இந்தப் பாவத்தைத் தீர்த்துக் கொள்ள என்னென்னமோ பின்னர் செய்தேன். பெரிய சம்பளம் கிடைத்த போது புத்தகங்கள் வாங்கி பல ஏழை மாணவர்களுக்குக் கொடுத்தேன். என்ருலும் மனம் நிம்மதிப்படவில்லை. களவு செய்தயாரையும் கேவலமாக நினைக்காமல் அவர்கள் மீது அனுதாபம் கொள்ளும் மனப் பக்குவம் என் அனுபவத்தால் ஏற்பட்ட பின்தான், மன அமைதி ஒரு விதமாக ஏற்பட முடிந்தது.

ஃ

திருச்சி கல்லூரியில் படிக்கையில் நாட்டிலே தேசிய விடுதலைப் போராட்டம் மகாத்மாகாந்தி தலைமையில் தீவிரமாக நடந்தது. பரீட்சை சமயத்திலும் பாடபுத்தகங்களைப் படிக்காமல், பேப்பர்களைத்தான் படிப்பேன். பக்கத்திலே "பனங்கால் வாசகசாலை". பனங்கால் ராஜா என்பவர், பிரிட்டிஷாருடன் ஒத்துழைத்த ஜஸ்டிஸ் கட்சியின் தலைவர். அவர் சென்னையின் முதல் அமைச்சராக இருந்தவர். அவர் பெயரால் நகர சபை நடத்தும் இலவச வாசகசாலை அது. அங்கு பல பத்திரிகைகளும் வரும். ஒன்று விடாமல் எல்லாம் படிப்பேன்.

சிறப்பாக ஈ. வெ. ரா. பெரியார் நடத்திய 'குடி அரசு' பத்திரிகையைப் படிப்பதில் அதிக ஆர்வம். நடை காரசாரமாக இருக்கும். புரியும் தமிழ். தமிழகத்திலே "நாயுடு, நாயக்கர், முதலியார்" என்ற "மும்மூர்த்திகள்" இருந்து பத்திரிகைகள் நடத்திய காலம் அது. டாக்டர்வரதராஜுலு நாயுடு, பெரியார் ஈ. வெ. ராமசாமி நாயக்கர், திரு. வி. கலியாண சுந்தர முதலியார் மூவரும் முறையே தமிழ்நாடு, குடி அரசு, நவசக்தி என்ற பத்திரிகைகளை நடத்திவந்தனர். இம்மூன்றையும் ஆரம்ப முதல் கடைசிவரை விடாமல்படிப்பேன். தமிழ்ப்பத்திரிகைகளைப் படிக்கும் வழக்கம் சிறு வயதிலேயே ஏற்பட்டது. சுவாமி சுத்தானந்த பாரதியார் "சமரச போதினி" என்ற சஞ்சிகையை தஞ்சாவூரிலிருந்து நடத்திவந்தார். அது எங்கள் வீட்டுக்குவரும். ஒவ்வொரு வாரமும் ஆவலுடன் காத்திருந்து, பள்ளிப் பாடத்தைவிட அப்பத்திரிகையை ஊக்கத்துடன்படிப்பேன். சிற்றுண்டிக்கான காசுக்கு பல சமயம் ஆங்கிலப்பத்திரிகையான 'ஹிந்து' வாங்கிப் படித்துவிட்டு பட்டினி கிடப்பதுமுண்டு. பத்திரிகைபடிப்பதில் அவ்வளவு பைத்தியம். இவை எல்லாம் என் பத்திரிகை வாழ்க்கைக்கான ஆரம்பப் பயிற்சி என்பதை அப்போதுசற்றும் உணரவில்லை.

ஃ ஃ ஃ

கல்லூரி விடுமுறைக்காக திருவையாற்றுக்கு வருவேன். அப்போது அங்கு 'வாலிபர் சங்கம்' ஒன்று அமைக்கப்பட்டது. என்னைக் காரியதரிசியாகத் தெரிவு செய்தனர். சங்கக்கூட்ட நடவடிக்கைகளை பலதினசரிப் பத்திரிகைக்கும் எழுதுவேன். 'தமிழ்நாடு' பத்திரிகையிலே, அப்படியே ஒரு சொல்லும் விடாமல் பிரசுரிப்பார்கள். நாம் எழுதியது முதல்முதலாக அச்சில் வந்து படிப்பதென்ருல், சொல்லமுடியாத மகிழ்ச்சி. அப்படி வந்த செய்திகளை பல தடவையும் படித்துப் படித்து மனமகிழ்ச்சியடைவேன். வாசகசாலைக்குவரும் ஆங்கிலப் பத்திரிகைகளையும் தமிழ்பத்திரிகைகளையும் பக்கத்தில் வைத்துக் கொண்டு, ஆங்கிலச்செய்தியை, தமிழில் எப்படி மொழி பெயர்த்து வெளியிட்டிருக்கிருர்கள் என்று ஒத்திட்டுப் பார்ப்பேன். இதனல்தமிழ்ப் பத்திரிகை 'பரிபாஷை' யைத் தெரிந்து கொள்ள முடிந்ததுடன் உலகவிவகாரங்களையும்,தேசியப்போராட்டப் போக்கையும் அறிந்து கொள்ள முடிந்தது. பத்திரிகைகளைப் படிக்காமல் பாட புத்தகங்களைமட்டும் படித்து பரீட்சையில் தேறியிருப்பின், ஏதாவது அரசாங்க உத்தியோகத்தில் எங்காவது ஒரு மூலையில் முடங்கிக் கிடப்பேன். நல்ல வேளை! பரீட்சையில் தேருததும்கூட ஒருவித நன்மைதானே. நமக்கு அப்போது தெரிகிறதா?

ஃ ஃ ஃ

சென்னைக்கு ரயில்வே ஆடிட் பரீட்சை எழுத வந்தேன். திரும்பி ஊருக்குப் போய் தாய்க்குப் பாரமாக, வேலையற்றவனக இருக்க விரும்பவில்லை. சென்னையிலே ஒரு நண்பரின் அறையில் தங்கி இருந்தேன். அந்தக் காலத்திலே கூட வேலை கிடைப்பது கஷ்டம்தான். "பிராமணனுக்குத்தான் வேலை கிடையாதே. நீ ஏன் வீணுகப் படிக்கவேண்டும்" என்று சில உறவினர் எனக்கு "புத்தி" கூறியதுண்டு. சென்னையில் 'ஆடிட்' வேலைக்கான பரீட்சை எழுதிய பின், பத்திரிகைகளில்வரும் "தேவை" கலத்தை ஆவலுடன்பார்த்துவந்தேன். அங்கு எனக்கு சிபார்சுசெய்யவோ, யோசனை கூறி உதவவோ யாரும் கிடையாது. குழல் ஊதும் ஓர் அழகான கண்ணன் படம் உண்டு. அதை என் அன்னை, சென்னைக்குப் புறப்படுகையில் என்னிடம் கொடுத்தார். மூட பக்தியுடன் அதைக் கும்பிட்டு விட்டு, "பிரம்ம சமாஜ்" வாசகசாலைக்கு வந்தபோது தான், அந்தத் தமிழ் நாடு பத்திரிகையில் 'தேவை' என்ற விளம்பரத்தைப் படித்தேன். அதைப் படித்ததுமே எனக்கு ஒரு நம்பிக்கையும் மகிழ்ச்சியும் ஏற்பட்டது. வாலிப சங்கக் காரியதரிசி என்ற முறையில் எழுதிய செய்திகளை எல்லாம் அப்படியே அப்பத்திரிகை பிரசுரித்ததாலும், மொழி பெயர்க்க ஓரளவு தெரியுமென்ற நம்பிக்கை, அன்று ஆசிரியரின் ஆசி கிடைத்ததன்மூலம் ஏற்பட்டதாலும்அந்தவேலை அநேகமாகக் கிடைக்கலாமென்ற நம்பிக்கை. அனுப்பிய செய்திகளை அப்படியே வெளியிட்டதால் 'தமிழ் நாடு' பத்திரிகைமீது ஓர் அபிமானம். ஆகவே மறுநாளே ஒரு மனுவை எழுதித் தயாரித்துக்கொண்டு, சுவாமி படத்தைக் கும்பிட்டுவிட்டு, தயங்கித் தயங்கிச் சென்றேன். தயக்கம் ஏன் தெரியுமா? டாக்டர் நாயுடு அவர்கள் பிராமண துவேஷி என்றும் அங்கு வேலை கிடைப்பது சந்தேகமே என்றும் ஒரு நண்பர் எச்சரித்தார். "ஏன் இப்படி? என்ன பாவம் செய்தோம். பிராமணகுலத்துக்குரிய சாஸ்திரக் கல்வியைப் பயின்று, ஆசார நியமத்துடன் குலத் தொழிலைச் செய்திருந்தால், இந்தச் சங்கடங்களெதுவும் இல்லாமல், நம் பெரியோர்கள் போல் கண்யமாக ஊரிலேயே வாழ்ந்திருக்கலாமே. இந்த வேலையில்லாப் பிரச்னையும் ஏற்பட்டிருக்குமா? ஆங்கிலம் படித்ததால், அக்கல்விச் செலவுக்காக குடும்ப சொத்தையும் அநேகமாக இழந்து, வேலைக்கும் தவிக்க வேண்டி ஏற்பட்டுள்ளதே" என்று மனத்திலேயே ஏதேதோ எண்ணங்கள். என்ருலும் இனி என்ன செய்வது? ஏதோ ஒரு சக்தி என்னை 'தமிழ்நாடு' காரியாலயத்துக்கு பத்திரிகைப் பணிக்காகக் கொண்டு சென்றது.

உன் அன்புள்ள,

அப்பா.

## நினைவும் கனவும்

அநேகமாய் முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன் பார்த்த ஒரு நாட்டுக்கூத்து யாழ்ப்பாணத்து கொட்டகைக்கூத்து. அதன் நினைவு இன்றைக்கும் என்ன பசுமையாயிருக்கிறது. குறிப்பிட்ட ஒரு சீசனில் வாரக்கடைசியில் பெரும்பாலும்வெள்ளிக்கிழமை இரவுகளில் இந்தக் கிராமிய அரங்கு. கொட்டகையும் மேடையும் ஸீன்களும் மேக்கப்பும் கதையும் பாட்டும் வசனமுமாக விடிய விடிய காந்த வெளிச்சத்துடனே கோலாகலமாக நடைபெறும். அப்பொழுது எனக்குவயசு ஏழோ எட்டுத்தான். எங்கள் வீட்டிலிருந்து ஒரு கூப்பிடு தொலைவில் வெறும் கட்டாந்தரையாகக் கிடந்த நிலத்தில் கொட்டகை போடப்பட்டிருந்தது. வண்ணர சமூகத்தினரின் கூத்து என்று ஊரிலே பேசிக் கொண்டாலும் அதிலே தோட்டம் செய்யும் கமக்காரர்கள், நிலபுலச்சொந்தக்காரர், ஆடுமேய்ப்போர் என்று பல சமூகத்தவரும் பங்குகொண்டு ஜனங்களை மகிழ்விக்க மேடையேறினர்கள். அந்தநாட்களிலேதமிழ் நாட்டிலிருந்து வந்து யாழ்ப்பாண நகரில் பல மாசங்கள் தொடர்ந்து நடைபெற்ற பிரபல நாடகங்களுக்கு என் போன்ற சிறுவர்களை நாடகம் பார்க்கப்போவோர் யாரும் அழைத்துப்போக மாட்டார்கள். சுப்பையா பாகவதர்-பபூன் சண்முகம் கோஷ்டி, கிட்டப்பா-சுந்தராம்பாள் கோஷ்டி, தியாகராஜ பாகவதர்-எஸ். டி. சுப்புலட்சுமி கோஷ்டி, மதுரை பாலவிநோத சபை என்பன போன்ற நாடகக்கோஷ்டி காலத்துக்குக்காலம் ஒன்று மாறி ஒன்று வந்துபோகும். நாட்டுப்பக்கங்களில் விளம்பரப்படுத்தப் பட்டணத்திலிருந்துகாரிலே மேளதாளத்தோடு வருவார்கள். அந்தக் கார்கள்எங்கள் வீட்டுவாசல் வழியாகத்தான்கீரிமலைக்குப் போகவேண்டும். போகும் போது நோட்டீஸ் கடதாசிகளை வீசிவிட்டுப்போவார்கள். அதற்குமேல் பட்டணத்தில் நடைபெறும் அந்தநாடகங்களைப்பற்றி எங்களுக்கு-என்போன்ற சிறுவர்களுக்கு ஒன்றும்தெரியாது. சிலநாட்களில் என் வீட்டிலிருந்தும்

## ரெனகோல்

மூட்டுவலிகள், கால்வலிகள், கண்களில்அழங்கள், முதுகுவலி, நீர்பிரிவின்போது எரிச்சல் உணர்ச்சிகளுக்குக்காரணமாக இருக்கும் குண்டிக்காய் மூத்திரப்பை ஆகியவற்றின் சகல கோளாறுகளையும் உத்தரவாதத்துடன் குணப்படுத்தும். குண்டிக்காய் வலி, குண்டிக்காயில் கல் அடைப்பு ஆகியன ஏற்படாமல் ரெனகோல் பாதுகாக்கிறது.

இன்றே ஒரு போத்தலை பரீட்சியுங்கள்

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கீழ்க்கண்ட விலாசத்திலும் கிடைக்கும்.

ஓ. டி. எஸ். லிமிட்டெட், கொழும்பு- 3

யாழ்ப்பாணப் பகுதி ஏஜன்ட்

என். எம். எஸ். அன்ட் பிரதர்,

கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனவும்

# கொட்டகைக் கூத்தும் குசலவர் கதையும்

சுற்றயலிலும் பலபேர் காசு செலவழித்துக் கொண்டு நாடகம்பார்க்கப்பட்டணம் போனார்கள். போய் வந்து ''எப்படியானாலும் எங்கட பபூன் செல்லையா அண்ணைக்குக் கிட்ட ஆரும் நெருங்க முடியாது. பபூன் சண்முகத்தையோரிடத்திலே வைத்து சரியாகக் கழற்றிவிட்டார்'' என்றெல்லாம் நாடக மேடைப் போட்டாபோட்டியையும் காட்டா குஸ்தியையும் பற்றி வெகுநேரம் கூடியிருந்து வாயாரப் பேசியதைக் காதாரக்கேட்டோம். செல்லையாபிள்ளை அந்நாளில் யாழ்ப்பாண மக்களின்ஏகோபித்த அபிமானம் பெற்ற ரேயல் பபூன்- 'ஆஸ்தான அகடவிகடம்.' வெளியேயிருந்து வருவோர் ஆளை எளிதில் மடக்கி மட்டந்தட்டி விட்டுப்போய்விடமுடியாது.

எங்கள்ஊர் கொட்டகைக் கூத்து இன்றைக்கு இரவு நடைபெறுவது நிச்சயமாகிவிட்டதனால் அதுசேதிஇன்று மாலையேஎங்களுக்குத்தெரிந்துவிடும். கொட்டகையில் வெள்ளைத் துணி கட்டி ஜோடிப்பு வேலைகள் நடைபெறும். அதன்பின் எங்கள் உற்சாகத்துக்குக் கேட்க வேண்டாம். விளக்கேற்றுவதற்குள்ளாகவே இராச்சாப்பாட்டைக் கேட்டு வாங்கி வெளி முற்றத்தில் குந்தியிருந்து சாப்பிட்டுவிட்டு அதன்மேல் வீட்டிலிருக்கப் பெறுமல் கூத்துக்கொட்டகைப்பக்கம் ஓடி முன்வரிசையில் மேடையருகே இடம் பிடித்துவிடுவோம். எங்கள் அடுத்தவீட்டுக்காரபிரதான குடியிருப்பாளர் ஒருவரே நடிகர்களுக்கு மேக்கப் செய்தஇரகசியம்எங்களுக்கு வெகு காலத்துக்குப் பிறகு தான் தெரியவந்தது. அந்த நாளில் மேக்கப் செய்பவரை முகப்பூச்சுக்கொடுப்பவர் என்று கிராமத்தில் சொல்வார்கள். நாடகத்தில் நடிகாபிமானிகள் சால்வைத்துணியில் காசுமுடிஞ்சு 'கொள்ளையோ கொள்ளை' எறியும் போதும், நடிகர்கள் மேடைக்கு வரும்சமயம் அதிர் வெடி முழங்கும்போதும், கோமாளியும் அனுமாரும் வந்தபோதும் நாங்கள் உஷார் அடைவோம். குழந்தைவேலு மேளத்தில்ஒத்துக்காரராயிருந்த பொன்னுச்சாமி என்ற ஓர் இந்தியர்ஒரு நாள் திடீரென கூத்துக்குள் கோமாளியாக மேடையில் ஏறி ''கௌுத்திமீனைப்போட்டுக்குழம்பு வைப்பாள் என் பெண்டாட்டி ஐயா'' என்று பபூன் பாட்டுப்பாடி ஆடி எல்லோரையும் திகைக்க வைத்துவிட்டார். பாட்டைப் பாடிக்கொண்டே வாய்க்குள் அவர் நாவடித்து எழுப்பிய குதிரைக்குளம்பொலி இன்றைக்கும் என் காதில் கேட்கிறது. செக மேவிய சிறீ கோதண்ட ராமன் நானே-ஏ-ஏ' என்று பூமியிலிருந்துவானம்வரைக்கும் எட்டும் நெடுங்குரலெடுத்துப்பாடிக்கொண்டு ஸ்ரீ ராமன் ஓர் ஆள் உயரமான தமது கோதண்டத்தைத் தூக்கி நிறுத்தி திரைமறைவிலிருந்து மேடையில் கால் வைத்தமாத்திரத்தே, அவரது கோதண்டத்தில் கட்டி வைத்த வெடி படீர் என வெடிக்கும் கொட்டகைக்கு வெளியேயும் ஸ்ரீராமன் கந்தையாவின் ஆதரவாளர்கள் டோம் டோம் என வெடி முழங்குவர். உடலெல்லாம் பச்சைஅங்கி அணிந்து முகத்துக்கும் கை கால் விரல், விரல்நகங்கள் காது கண் மூக்கு ஏகமும் பச்சைப் பூச்சுப் போட்டு, பச்சைத் துணியில் கையில் ஒரு லேஞ்சி தலையலங்காரமாக தலைக்கு ஒரு சோடி மயிர்- இத்தனை விமரிசைகளுடனே ஸ்ரீராமன் மேடையில் தோன்றுவார். முன்வரிசையிலிருக்கும் என் போன்றசிறுவர்களின்வாய்க்குள் அந்தச்சமயம் பார்த்து காந்த விளக்கைச்சுற்றிய பூச்சிகள் புகுந்துவிடும். ஸ்ரீ ராமனை இன்றைக்கு நினைத்தாலும் பச்சை வேப்பிலைக் கொழுந்துதான் நினைவு வரும்.

இந்தக்குசலவ நாடகத்தில் சபையைக்கல்லாக நிசப்தத்தில் ஆழ்த்திவிடும்ஒருகாட்சி ஸ்ரீராமன் தன் பிள்ளைகள் மேல் இராமபாணம்தொடுக்கும் கட்டமாகும். இராம பாணம் என்றால் தெரியுமல்லவா? தாக்கியதனைத்தையும் சல்லடைக் கண்களாகத் துளைத்துவிட வல்ல ஒரு பொல்லாத படைக்கலம். நாடகத்தில் அது வண்ணத்தாள் சுற்றிய ஒரு சாதாரண துவரங்கம்பாகக் கண்ணுக்கு தோன்றினாலும்அதனை இராமபாணமாகமதித்துக்கொள்ளவேண்டியதுநமதுகடமை- நாடகம் பார்ப்பவர்களுக்குள்ள பொறுப்புணர்ச்சி.

குதிரை ஆளைச் சுமந்து செல்வதா அல்லது ஆளாகப் பட்ட ஆள் குதிரையைச் சுமந்துசெல்வதா என்றெல்லாம் இக்கொட்டகைக் கூத்தைப்பார்க்கும்போது கேட்பதில்பிரயோசனமில்லை. கேட்பதுநல்லதுமல்ல. ஸ்ரீராமனின் வாழ்க்கைத் துணைவியும் பட்டத்து அரசியுமான வைதேகியாரே வாயுவேகம் மனோவேகமாகப் பாயும் புரவிகள் பூட்டிய ஒரு சித்திரத் தேரைக் கயிறுபோட்டு மாட்டி அதன் நடுவில் நின்று தோளில் சுமந்து நடந்து நடந்தே வனவாசம் போகத் துணிந்துவிடும்போது ஓசி நாடகம் பார்க்க விடியவிடிய உட்கார்ந்துவிடும் நமக்கெல்லாம் பேச்சென்ன, கேள்வி என்ன? அதுவுமன்றி இது பட்டணத்துத் தகரக்கொட்டகை அல்லத்தான் என்றாலும்ஆட்டகாலச்சட்டத்தையும் ஒழுங்குவிதிகளையும் அநுசரிப்பதே முறை. உவண்ஸ் மோர் என்பதெல்லாம்கூட அங்கீகரிக்கப்படமாட்டாது. வாயை மூடிக்கொண்டுஇருந்துவிடவேண்டும்.

[வளரும்]

**காங்கேயன்**

---

## காலம் மறக்காதகவிஞன் — III

# பிள்ளைப் பிராயத்திலே

'சுப்பிரமணியம்'என்று பாட்டனாரின்பெயர் சூட்டப்பெற்று, 'சுப்பையா' எனச் செல்லமாக அழைக்கப்பட்ட பாரதிக்கு, 5 வயது நிரம்பும் முன்னரேயே தாயார் இயற்கையெய்தினார்கள். சாதாரணஅறிவுபெற்ற குழந்தைகள் 5வயதில் பிரிந்த தாயை ஆயுள்வரையில் நினைத்துக் கொண்டிருப்பதில்லை. ஆனால் இந்நிகழ்ச்சிபாரதியின் மனத்தில்அவ்வளவுஎளிதில்மறக்க முடியாததொன்றாய் ஆழப் பதிந்துவிட்டது. தாயின்மடியிலே தலைவைத்து[○]ப்பால் குடித்துப்படுத்திருந்த காலத்தே அவள்மாயக்கதைகள் பல சொல்லித் தன்னை மயக்கிக் கண்ணயரச் செய்ததும், வட்ட நிலாக்காட்டி, வாயில்சோறு ஊட்டி தன் பிள்ளை எப்படியெல்லாம் வாழவேண்டும் எனப்பல எடுத்துக்காட்டுகளால்ஆசை தீர அமுதூறப் பேசிப்பேசி அறிவுறுத்தியதும், பசுமரத்தாணிபோல் அவர் நினைவில் பதிந்துகிடந்ததை அவர் இயற்றிய 'கண்ணன்-என் தாய்' என்றபாடல் மறைமுகமாகக் காட்டி நிற்கிறது.

சின்னஞ்சிறுவயதில்உலகச் செய்திகளை எல்லாம் மிக விரைவில்தன்பிள்ளைஅறிந்து கொள்ளவேண்டும் என்ற ஆவலில்அந்தத்தாய், வேடிக்கைக்கதைகள்மட்டுமன்றி வேதக்கருத்துகளையும், புராணக் கருத்துகளையும் கூடச் சுவையாகச் சொல்லியதை, ஆவலோடு அப்போதுகேட்டிருந்ததையும் பின் அவற்றுள் பல பொய்க்கதைகளென்றும், காலத்திற்கு ஒவ்வாதன என்றும் அறிந்துகொண்டதையும் பாரதி குறிப்பிடுகிறார்.

[○] தெய்வப்பாடல்கள்- சக்திக்கூத்து.

''குகைக்குள் அங்கே
இருக்குதடா தீபோலே-
அது
குழந்தை தன் தாயடிக்கீழ்
சேய்போலே''

பாரதியார்கதைகள். 'ஞானரதம்'-கடற்கரை.

''அவ்வாசனங்கள்இலவம் பஞ்சுபோன்ற யாதோ ஒரு பொருள் பொதிந்தனவாய் வெண்பட்டால் மறைக்கப்பட்டிருந்தன. அவற்றில் சாய்ந்தவுடனே, தாயின் மடியிலே சாய்ந்தது போல உள்ளத்திற்கு ஆறுதலுண்டாயிற்று.

''சாத்திரம் கோடி வைத்
தாள்-அவை
தம்மினும் உயர்ந்த
தோர் ஞானம் வைத்
தாள்
மீத்திடும் பொழுதினிலே-
நான்
வேடிக்கையுறக் கண்டு
நகைப்பதற்கே
கோத்த பொய் வேதங்க
ளும்-மதக்
கொலைகளும் அரசர்தம்
கூத்துக்களும்
மூத்தவர் பொய் நடையும்
-இன
மூடர்தம் கவலையும்
அவள்புனைந்தாள்
வேண்டிய கொடுத்திடு
வாள்-அவை
விரும்புமுன்கொடுத்திட
விரைந்திடுவாள்
ஆண்டருள் புரிந்திடுவாள்
-அண்ணன்
அருச்சுனன் போலெனை
ஆக்கிடுவாள்''

மொழியைப் பயிற்றி, ஆளாக்குகிற முதல் குரு தாயே. பின்னர்தான் தந்தை அதன்பிறகே ஆசான். வீரசிவாஜி, காந்தியடிகள் போன்றோரின் பின்னுள்வாழ்வில் அமைந்த பண்பாடுகளுக்கு அவர்களைப்பெற்ற தாயர், பிள்ளைப்பருவத்திலே கற்றுத்தந்த கதைகளும், அவற்றிலமைந்த கருத்துக்களுமே அடிப்படையாக அமைந்தனஎன்பதை பாரதியின் வாழ்விலும் நாம்காண வேண்டும். சிறந்த கதாசிரியனாக, நல்லநகைச்சுவைஎழுத்தாளனாக, உளம் சிலிர்க்கச் செய்யும் உணர்ச்சிக் கவிஞனாக, தேசபக்தனாக, இன்னிசைப்பாடலாசிரியனாக, ஆராய்ச்சியாளனாக நம் பாரதிஅமைவதற்கு அவரது அன்னை பிஞ்சுவயதில், நெஞ்சில் கோத்த அவ்வேடிக்கைக்கதைகளும், பாடிய பாடல்களும் அறிவுரைகளும் மூலகாரணமாகுமெனக் கூறுவது மிகையன்று.

தாய்ப்பாசம் முழுவதும் தனக்குக்கிட்டவில்லையே என்றுபாரதி அடிக்கடி வருந்தியதாக அறிஞர் வ. ரா. அவர்கள் குறிப்பிடுகின்றார். ''வீதியிலே, ஒரு குழந்தையைத் தாயில்லாப்பிள்ளை என்று எவரேனும் சுட்டிக் காட்டிவிட்டால் பாரதியார் அந்த இடத்திலேயே ஸ்தம்பித்து நின்றுவிடுவார். அவர் மனத்தில் என்னென்ன எண்ணங்கள் தோன்றி மறையுமோ அவைகளைநான்அறிந்ததில்லை.'' என்ன ஓய்! எனக்கு அம்மா மயக்கத்திலிருந்து ஒருநாளும் விடுதலை இல்லையா?'' எனப் பக்கத்திலிருக்கும் நண்பரை வினவி விட்டுச் சிறிது நேரத்துக்கெல்லாம் 'அம்மா அம்மா' என்று இசையிலேயே கூவுவார்.

கவிஞரது சுயசரிதைப் பாடல்களிலும் இந்தத் தாய் ஏக்கம் புலப்படுகிறது.

''என்னை யீன்று எனக்கு
ஐந்து பிராயத்தில்
ஏங்க விட்டு விண் எய்திய
தாய்''

தான் வணங்கும் தெய்வத்தைத்தாய்வடிவில்காணவும் [○] தனதுநாட்டைத்தாயாகவழிபடவும் [ஃ] அவரைத் தூண்டியது பிள்ளைப்பருவத்துப் பதிந்ததாய் அன்பே ஆகும்.

[○] மூன்றுகாதல்-கண்ணி 8 ''அன்னைவடிவமடா அவள் ஆதிபராசக்தி தேவியடா.''

[ஃ] பாப்பா பாட்டு- கண்ணி 11. ''தமிழ்த்திரு நாடுதனைப்- பெற்ற தாய் யென்று கும்பிடடி பாப்பா''

தாய்க்குப்பின் பாரதியையும், அவருடன் பிறந்தவரான பாகீரதியையும், அவருடைய பாட்டியார் பாகீரதி அம்மாளும். அவ்வம்மையாரின் உடன்பிறந்தவர்களும், மாமன்மாரிருவரும், தாயாருடன் பிறந்த சிற்றன்னை நால்வரும் பேணி வளர்த்தனர். சின்னமாமா சாம்பசிவ ஐயரும், கடைசிச் சித்தி இராமுவும் பாரதியின் ஒத்தவயதினராதலால் விளையாட்டுத் தோழராய் அமைந்தனர்.

இரண்டாண்டுகளுக்குப் பின் பாரதியின் தந்தை, வள்ளியம்மாள் என்பவரை மறுமணம் செய்துகொண்டார். அது சமயம் பாரதியின் பூணூல் திருமணமும் நடந்தேறியது. வள்ளியம்மையாருக்கும் நாளடைவில் இரு குழந்தைகள் பிறந்தன. ஆயினும் சிற்றன்னையாகிய அவர் அன்னைக்கு ஈடான அன்புகாட்டி, இவ்விளங் குழந்தையின் இன்பக்கனவுகளை அழித்துவிடாமல் பாராட்டிவளர்த்துவந்தார். தனது சிற்றன்னை கொடுமை செய்ததாக, பாரதி ஒரு குறிப்புக்கூடக் கூறவில்லை. மாறாக, தன்பிள்ளை உடல் நலமின்றி எலும்புதெரியஇளைத்துப்போகிறானே என்றகவலையின்றி, அவனை ஓடி ஆடி விளையாடவிடாது கட்டுப்பாடுசெய்து பள்ளிசென்று வந்தபின்னும் எந்த நேரத்திலும் படிக்கவேண்டும், ஆங்கிலமும் கணிதமும் பயில வேண்டும் என்று தந்தையால் வற்புறுத்தப்பட்டுத் துன்பத்திற்கு ஆளானதையே பாரதி தனது சுயசரிதையில் குறிப்பிடுகிறார்.

''ஆண்டோர் பத்தினில்
ஆடியும் ஓடியும்
ஆறு குட்டையின் நீச்சி
னும் பேச்சினும்
ஈண்டு பன்மரத்தேறி
யிறங்கியும்
என்னொடொத்த சிறியர்
இருப்பரால்!
வேண்டு தந்தை விதிப்பி
னுக் கஞ்சியான்
வீதியாட்டங்களே
தினுங் கூடிலேன்.
தூண்டு நூற்சணத்தோடு
தனியனாய்த்
தோழமை பிறிதின்றி
வருந்தினேன்.''

இவ்வாறு, தந்தைக்கு அஞ்சி 'படிப்பு படிப்பு' என்று அவதிப்பட்டபாரதிக்குச் சிலநேரங்களில் அவரது சிற்றன்னை ஆறுதல் மொழி கூறி, அமைதிப்படுத்தியிருக்கக் கூடும். ஐந்துவயதுவரை அன்னை இனிமையாகச் சொல்லித்தந்த அறிவுரைகள், பின்பு பத்துவயது வரை தந்தை வற்புறுத்திப் படிக்கவைத்த பள்ளிப் பாடங்கள், அப்போதுசுமையாக அமைந்த போதிலும் அப்பிஞ்சுப் பருவத்திலேயே பேரறிவு பெறுவதற்கு ஒரு வகையில் மறைமுகமாக உதவின என்பதில் ஐயமில்லை.

இத்தகைய கட்டுப்பாட்டையும் பாரதி சிலநேரம் உடைத்தெறிவதுண்டு எனத்தெரிகிறது. ஒருநாள் பாரதியும், ஒத்தவயதுள்ள அவரது தாய்மாமனான சாம்பசிவமும் மதில் ஏறிக் குறித்துப் பஞ்சாலைக்குள் சென்று சின்னசாமி ஐயரின் மேசைக்குள் சில்லறைக்குத் துழாவினர். மேசையுள் இருந்த கைத்துப்பாக்கியை எடுத்துவிளையாடத்தொடங்கினர். சாம்பசிவம் கையிலிருந்த துப்பாக்கியிலின்று வெடித்தகுண்டு பாரதியைச் சுட்டு வீழ்த்த இருந்ததாம். தமிழகத்தின் நல்ல காலம், பாரதி தப்பிப் பிழைத்தார்.

தனது சுயசரிதையில் பாரதி குறிப்பிடும், பிரகலாதன், மார்க்கண்டேயன், குமரகுருபரர், ஞானசம்பந்தர் வாழ்க்கை வரலாறுகளை அவரது அன்னையார் அடிக்கடி சொல்லியிருக்கக்கூடுமென ஊகிக்கலாம். சிறுவயதில் அரியநிலையை அடைந்த அப் பெரியவர்களைப் போல் தானும் சிறப்புப்பெறவேண்டும். என்னும் துடிப்பு பாரதிக்கு இளமை தொட்டே இருந்துவந்தது என்பதை அப்பாடல் வரிகள் நமக்கு உணர்த்துகின்றன.

(வளரும்)

**சு. சண்முகம் எம். ஏ.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலச் சக்கரம்

# "சானுவின் லொண்டன்லொடக்"

"என்ன சக்கடத்தார் நான் வாங்கித்தந்த பட்டு வேட்டியும் சால்வையும் என்ன ஆச்சு?"

சக்கடத்தார் அவருக்கே உரித்தான டபிள் சுருதியில் பதிலளிக்கிறார்:

"பட்டுவேட்டியையும் சால்வையையும் அண்டைக் கொருநாள் கோயிலுக்குப் போகிறதுக்காக அலம்பி வெயிலில் போட்டன். வேட்டியை மாடு சப்பிப்போட்டுது."

"அப்போ, சால்வை?"

"சால்வையைக் கண்டுக் குட்டி திண்டுட்டுது."

"ஓய், இதென்னகாணும், முன் வாயிலே இரண்டு பல்லையும், காணவில்லை."

"அதுவோ அதை நீங்களும்கண்டறிஞ்சுட்டியளோ? அண்டைக்கு என்னை மாப்பிள்ளை பார்க்க பெம்பிளை வீட்டுக்காரர் எங்கவீட்டுக்கு வந்தப்போ கூட அவுங்களுக்கு முன்னலேபோய்நான் வாயைத்திறக்காமலே கெட்டித்தனமாக இருந்தநான். அவுளுவளைப் பார்த்து ஒருக்கால் சிரிக்கக்கூட இல்லை. நீங்களல்லோ இப்ப கண்டிட்டியள்.

"ஏன் காணும் என்ன நடந்தது? எப்படிப் பல்லுப் போச்சு?"

"அதை ஏன் கேட்கிறியள் ஐயா, அந்த நாசமறுப்பான் சிதம்பரப்பிள்ளை ஒரு நாள் என்னிட்டே வந்து ஒரு புத்தி சொல்லும்படி கேட்டான்."

"என்னத்துக்கு சக்கடத்தார்?"

"தன்னுடைய பெயரை மூன்று அல்லது நாலு எழுத்துக்குள் வரும்படி எப்படிச் சுருக்கலாம் என்று கேட்டான்."

"நீர் என்ன சொன்னீர்?"

"அவருடைய தகப்பனர் பெயருக்குள்ள முதல் எழுத்தையும் சேர்த்து 'கே.எஸ். பரப்பிள்ளை' என்று வையுமன் என்றேன்."

"அதன் பிறகு-?"

"அந்தப் படுபாவி நின்றுற் போல கண்ணைப் பொத்தி மின்னிவிட்டான் ஐயா."

"ஓகோ, அப்படித்தான் இரண்டு பல்லுக் கழற்றினீரோ?"

சானு குழுவினரின் சக்கடத்தார்நாடகத்தில்இப்படி ஒரு சந்திப்பும் உரையாடலும்நடைபெறுகிறது. இந்த நாடகம் முழுக்கவும் இப்படி ஊர் சுற்றி வலம் வந்து வம்பளக்கும் உரையாடலாகவே நடைபெறுகிற தென்றாலும் ராஜா-ராஜரத்தினம் ஒரு நாட்டுப்புற வெங்காயமாக மேடையில் தோன்றி ஒரு முதல் நம்பர் குணசித்திர நடிகராக நடித்து அனைவரிடமும் 'சபாஷ்' வாங்கிக் கொள்வதுடன் சபையில் கூடியிருந்த ஆண்களையும் பெண்களையும் சிறுவர்களையும் வயிறு குலுங்கச் சிரிக்கவைக்கிறார். கதம்ப நிகழ்ச்சியின் கடைசி அயிட்டமாக இந்த ஆளை மேடைக்கு வருவித்து அவரது உண்மைத் தோற்றத் தில் 'சானு' அவரை சபைக்கு அறிமுகப் படுத்தியபோது "அடடே, இவர்தானு ராஜரத்தினம்?" என்று எல்லோரும் திகைத்தார்கள். மேக்கப்பும், நடிப்பும் பேச்சும் அந்த இரட்டைக்கட்டுக்குரலும்அப்படி ஆள்மாருட்டம் செய்துவிடுகின்றன.

மேல்வீடு கொஞ்சம் பழுதான நம்மூர்ப்பரியாரிப் பொடியன்சானு வடிவேலுச் சட்டம்பியார் வீட்டில் பன்னிரண்டாவது சமையல்காரனுகச் சேர்ந்து அசட்டு வேலைக்காரனுக கூத்தடித்து பெரும் கலம்பகம்செய்கிறார். 'மியாவ் மியூவ்' என்றால் தெரியுமா? அவனுக்குத் தெரிந்த சிங்கப்பூர் சமையலில் ஒரு கூட்டுக்கறிக்குப் பெயர் அப்படி. அது என்ன இழவு கறியோ, ஒருவேளை பூனைக்கறியாகக்கூட இருக்குமோ தெரியவில்லை. கால் புண்ணிலே ஈயும் கொசுவும் சதா மொய்த்தபடி இருக்க, அடிக்கடி இடுப்புவேட்டியை முழங்காலுக்குமேல் தூக்கி இரண்டு கையும் அடித்து அதை வேறு விரட்டிக் கொண்டே வேலை வினை கெட்ட இந்தப் பரியாரிப் 'பொடி' சட்டம்பியார் வீட்டில் மியாவ் மியூவ் கூட்டுக் கறியும் லொண்டன்லொடக் பணியாரமும் பண்ணி ஊரையே கூட்டிவிடுகிறன். சானுவின் அனுபவமுத்திரை பெற்ற கலை, நிறைமதியாக அங்கங்கு இந்த அசட்டு வேலைக்காரனிடம் சுடர்விட்டு நம்மைக் கவர்ந்து பெருமிதம் கொள்ளச்செய்கிறது.

"நான் இங்கே இந்த யூனியன் கல்லூரியில்தான் கல்வி கற்றேன். அதோ அந்தமண்டபத்தில் கல்லூரி நாடகங்களில்நடித்திருக்கிறேன். சே, அந்தக்காலத்தில் எத்தனை காடைத்தனம், எவ்வளவு முட்டாள்தனங்கள் செய்தோம்" என்று பழமை உணர்ச்சியில் ஆழ்ந்துபோய் சில வார்த்தைகள் அவையடக்கமாகச் சொல்லிவிட்டு திறந்தவெளியரங்கில் கால் வைத்தார் சானு. தெல்லிப்பழை சண்முகநாதனுக்கு இன்றெல்லாம் ஊரிலே உலகத்திலே என்ன வரவேற்பு. கல்லூரியில் ஒரு பாகத்தை பிரின்ஸிபல் அவரிடம் ஒப்படைத்துவிட்டுப் போய்விட்டதுபோல யூனியன்கல்லூரி திறந்தவெளியரங்கு அனறு சானு குழுவினரின் ஆட்சியாக நிர்த்தூளிப்பட்டது.

கல்லூரி விளையாட்டு மைதானத்தில் ஓங்கி வளர்ந்து நின்றதொரு தென்னை மரத்தின் கீழ் கலைமெருகூட்டும் ஓர்அழகான பின்னணிக் காட்சியாக மரத்தை நிறுத்தி மேடை அமைக்கப் பட்டிருந்தது. சானுகோஷ்டியின் கூத்தும் கும்மாளமும் ஓயும்வரை இந்தத் தென்னை பூரணசந்திரிகையில் சிலுசிலிர்த்து தானும் அழகாக ஆடிஅசைந்து களித்தது. இதேதென்னைமரத்தில்தான் அந்நாளில் சானு பிரின்ஸிபலுக்குத் தெரியாமல் ஏறிக் களவாகத் தேங்காய்பறித்திருப்பாரோ! அகப்பட்டுக் கொண்டிருந்தாலும் 'கன்றுக்குட்டிக்குக் குழைபிடுங்க ஏறினன் ஐயா' என்று சொல்லித் தப்பியிருப்பார்.

இன்றைக்குச் சரியாக முப்பத்திமூன்று ஆண்டுகளுக்கு முன்னதாக இதே கல்லூரியில்முதன்முதலாக சானுவை ஸ்டேஜில் பார்த்தேன். அன்று யார் வீட்டிலோ போய் பெருஞ்சாதி நாய் ஒன்றை அதன் கழுத்தில் பனைநார் போட்டு மாட்டிக் கட்டி இழுத்துக்கொண்டு வந்து மேடையில் ஏறினர். பல நாட்டு உடையும் பல சாதிஅலங்காரமும்பலஊர்ப் பேச்சுமாய் ஒரு விநோத மஞ்சரியாய்த்தோன்றி, அப்பொழுது தான் நேரே சீமையிலிருந்து வந்திறங்கிய வரைப்போல தனது உலகச் சுற்றுப்பயணம்பற்றி ஒரே அண்டப்புழுகும் ஆகாயப் புழுகுமாக அவிழ்த்தார்.

அத்தனை புழுகுகளையும் தமது வாழ்க்கையில் இன்று மெய்யாகவே சாதித்துவிட்டதுடன் அந்தக் கல்லூரித் தென்னையைப்போல ஓங்கி வளர்ந்து குருத்தும் குரும்பையும், பூவும் பாளையுமாக தாளுண்ட நீரையெல்லாம் தலையாலே தந்து நம்மை மகிழ்வித்து நிற்கும் அபூர்வமானதொரு கலைஞர் அவர்; வியப்பதற்குரியது அவர் வளர்ச்சி.

சானு பத்திரிகையில் பணிபுரிந்து அனுபவம் பெற்றதொரு நல்ல எழுத்தாளருமாவார் என்ற விஷயம் பல பேருக்குத்தெரியாது.

[இக்கதம்பநிகழ்ச்சி வறுத்தலை விளான் வாசிகசாலை நிதிக்காக நடத்தப்பட்டது]

—கதிரவன்

---

## திருவாசகத்தில் ..

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

துணியப்படும். பரி என்பது வேதப்பாடலைச் சுட்டுதல் வேருவழக்கு. பரிச்சேவகன் என்பது வேதங்கள் மீது எழுந்து அருளுபவன் என்பதே பொருத்தமாகும்.

... இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும்
பிறந்திளைத்தேன்
எம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள்
கண்டின்று வீடுற்றேன்.
— சிவபுராணம்

என மணிவாசகர் கூறினவாகலின், இவ்வுலகில்பிறந்து ஐம்புலவொடுக்கம் அறிந்து அன்புவழியால் ஞானமடைந்து இரண்டறக்கலந்தனர் என்பதே மணிவாசகருடைய வாழ்க்கை வரலாற்றின் சுருக்கமாகும்.

---

## உயிரின் மதிப்பு என்ன?

* ஓர் ஆண் அல்லது பெண்ணின் உயிர் என்ன பெறும்? அதன் மதிப்பு என்ன? விபத்தில் இறக்கும் ஓர் ஆண் அல்லது பெண்ணிற்கு இழப்பீடு தரக்கோரும் வழக்குகளில் நீதிமன்றங்களுக்கு இது தீராத தொல்லையாயிருக்கிறது.

பிரிட்டிஷ் நீதிமன்றங்கள் அண்மைக்காலம் வரையிலும் இரண்டாம் உலகப் போருக்கு முன்னர் நிர்ணயித்த மதிப்பை 500 பவுன் வைத்து இழப்பீட்டைக் கணித்து வந்தன. ஆனல் பவுனின் வாங்கும் சக்தியானது உலகின் இதரநாணயங்களைவிடக் குறைந்துவிட்டது என்றும் அதனுல் மேற்சொன்ன மதிப்பு மடத்தனமானதல்லவெனினும் நிதர்சனமற்றது என்றும் வழக்கறிஞர்கள் வாதாடுகின்றனர்.

உயிரோடிருப்பதன்மதிப்பு அதாவது வாழ்நாளின் மதிப்பு 1000 பவுன் (சுமார் 21 ஆயிரம்) என்று உயர் நீதிமன்ற நீதிபதியொருவர் தீர்ப்புக்கூறியிருக்கிறார்.

---




சாளி! நான் கேட்டது இதுவல்ல! ஜின் என்று சொல்லும்போது நான் கேட்பது—

## மெஸ்தியா ஜின்னையே

ஏனென்ருல் . . . . . . ? ?

1. புதிய மெஸ்தியா ஜின் இரு முறை வடிக்கப்பட்டது.
2. புதிய மெஸ்தியா ஜின் வெற்றி கண்டதோர் விசேஷ வெளிநாட்டு முறைப்படி தயாரிக்கப்படுவது.
3. புதிய மெஸ்தியா ஜின் மிகப் புதுமையான பிரெஞ்சு யந்திரங்களால் செய்யப்படுவது.
4. புதிய மெஸ்தியா ஜின்கள் [கலப்பற்றதும், தோடம்பழ ரஸம் கலந்ததும்] மென்மையானவை — வெண்பட்டும் மஞ்சள் ஊதாவும் — ஆ! அதுதான்!
5. புதிய மெஸ்தியா ஜின்தான் 'கொக்டெயில்' பானத்துக்கு சிறந்த அஸ்திவாரம். அதுமட்டுமல்ல, சாளி! நீ நினைக்கமுடியாத 'கொக்டெயில்' எல்லாவற்றையும் அது உருவாக்கும்.
6. புதிய மெஸ்தியா ஜின் ரொம்ப ரொம்ப சுத்தமானது—வெறி அம்மல் என்பதே கிடையாது. ஆனபடியால்தான், மேனை சாளி, நான் ஜின் என்று சொல்லும் போது

### புதிய மெஸ்தியா ஜின்னையே குறிப்பிடுகிறேன்

இங்கே காணப்படும் நமது நண்பர் உண்மையிலேயே ரசித்து மதுவை அருந்துபவர். புதிய மெஸ்தியா ஜின்னை தாம் விரும்புவதற்கு ஆறு காரணங்கள் கூறியிருக்கிறார். நீங்கள் செய்யவேண்டியது இதுதான்:— புதிய மெஸ்தியா ஜின்னை நீங்கள் விரும்புவதற்கு உங்களுடைய சொந்த காரணம் என்னவென்பதை எழுதி புதிய மெஸ்தியா ஜின் போத்தல் லேபல் ஒன்றுடன **புதிய மெஸ்தியா போட்டி** மே/பா. விஷன் விளம்பரங்கள் லிமிடெட், 3-வது மாடி, மாக்கான் மரைக்காயர் கட்டிடம், கொழும்பு—1 என்ற விலாசத்துக்கு அனுப்பவும்.

எத்தனை சீட்டுகளாவது அனுப்பலாம். ஆனுல் ஒவ்வொரு சீட்டோடும் ஒருபுதிய மெஸ்தியா ஜின் லேபல் சேர்க்கப் படவேண்டும். **பன்னிரண்டு பரிசுகள் கொடுக்கப்படும். முதலாவது பரிசு சிங்கப்பூருக்குப் போய்வர ஓர் இலவச விமான டிக்கட் அல்லது அதற்குப் பெறுமதியான காசு. மிகக் கூடுதலான** சீட்டுகள் **அனுப்புபவருக்கு** சென்னைக்குப் **போய்வர ஓர் இலவச விமான டிக்கட் அல்லது அதற்குப் பெறுமதியான காசு.** ஒரு விசேஷ நீதிபதி குழுவின் தீர்ப்பே முடிவானது. ஸ்ரீலங்கா டிஸ்ரிலறீஸ் லிமிடெட், விஷன் விளம்பரங்கள் லிமிடெட் ஆகிய ஸ்தாபனங்களில் வேலை செய்வோரும் அவர்களுடைய குடும்பத்தினரும் இந்தப் போட்டியில் பங்குபற்றலாகாது. போட்டிமுடிவு திகதி மே 31, 1967.

## சிங்கப்பூருக்கும் சென்னைக்கும்

### மெஸ்தியாவுடன் பறந்து செல்லுங்கள்

10 ஆறுதல் பரிசுகள் உண்டு!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆல்ரவுண்டர் சிதம்பரநாதன்



"........அந்நியர்கள் இந்நாட்டைக் கைப்பற்றிட அல்லும் பகலும் திட்டம் தீட்டிக் கொண்டிருக்கும் இவ்வாபத்து வேளையிலே நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் கிளர்ந்து எழவேண்டும்........" என வேண்டுகிருர் போல் இருக்கிறது மாந்தை குறுநில மன்னன் 'கயிலைவன்னியன்''. திரு. த. சிதம்பரநாதன் கயிலை வன்னியனுக நடிக்கும் 'தணியாத தாகம்'' என்னும் நாடகம் 30-4-67ந் திகதியாழ்ப்பாணம் மாநகரசபை மண்டபத்தில் மேடையேறுகிறது

### நம் நாட்டுக் கலைஞர்

இளம் வயதில் நாடகத்தில் நடிக்க தந்தையின் அனுமதி பெறப்போய், அவரின் பேச்சுக்கும் ஏச்சுக்கும் ஆளாகிய சிதம்பரநாதன்தான் இன்று பல நாடகங்களில் நடித்துவிட்ட பெருமைக்குரிய நடிகராக இருக்கிருர்!

''நடிப்புக்கலை எனக்கு இயற்கையாகவே அமைந்தது. நானே பாடி நடிப்பேன்.''

அவரைச் சந்தித்தபோது முதல் முதலாக என்னிடம் சொன்ன வார்த்தைகள்தான் இவை! பழகுவதற்கு இனியவரான இவருடன் நாடகத்துறைபற்றி எவ்வளவு நேரம் வேண்டுமானுலும் பேசிக்கொண்டேயிருக்கலாம்!

1959-ம் ஆண்டு பிற்பகுதியில் மன்ஞரில் ஹாஸ்ய நாடகங்கள் பலவற்றை மேடையேற்றியதை மறக்காது நினைவில் வைத்துக்கொண்டிருக்கிருர். 'காசாலேசா' 'கடவுளின் வருகை' 'யமகண்டம்' போன்ற பல நாடகங்கள் இவரால் மேடையேற்றப்பட்டுள்ளவை.

''கதை, வசனம், பாட்டு, இசை அமைப்பு, இயக்குநர் இவை அனைத்தையும் ஒருவரே ஏற்றபடியால் எல்லா நாடகங்களும் ஒரே தன்மையாக அமைந்து விடவே கதை வசனம் பொறுப்பை ''கரவைக்கிழானும்'' இசையை டாக்டர் அ. பவளத்துரையும், இயக்குநர் பொறுப்பை சைவப் புலவர் சு. செல்லத்துரையும் ஏற்றுக்கொண்டோம். கலைவிழா வில் பங்குபற்றுவதற்காக ''இராஜஇராஜ சோழனையும் இராஜேஸ்வரத்தையும் பின்னணியாகக் கொண்ட 'சிதைந்தசிலை' என்ற நாடகத்தைமேடை ஏற்றிஞேம். இராஜ இராஜ சோழன்பாகத்தை நான் ஏற்று நடித்தேன். சமூக நாடகங்களில் கதாநாயகனுக நடித்தபோது, ஒப்பனை அசோகனைப் போல இருந்தது என்று புகழ்ந்த நண்பர்கள், இராஜஇராஜ சோழனுக நடித்தபோது ரி. கே. பகவதிபோல இருக்கிறது என்றனர்'' என்று பெருமையுடன் கூறிஞர் சிதம்பரநாதன்.

''எனது உயர்ச்சிக்கு முழு உதவியாக இருந்தவர் சைவப்புலவர் சு. செல்லத்துரை ஆசிரியர்தான். வயதில் என்னில் இளையவர். ஆனுல் அறிவில் முதியவர். ஆரம்ப நாடகம் ஒன்றில் பாகவதராக வேடம் ஏற்று இருபது நிமிடம் கதாகாலட்சேபம் செய்தேன். அன்றிலிருந்து பல அன்பர்கள் கதாப்பிரசங்கம் செய்யும்படி வேண்டிக்கொண்டனர். புலவர் அவர்களின் உதவியால் அன்பர்கள் விரும்பிக் கேட்கும் போது கதாப்பிரசங்கம் செய்கிறேன். என்வாழ்வில் கரவைக்கிழான், டாக்டர் அ. பவளத்துரை, என் அரசாங்க ஊழியர்களான சக நடிகர்கள் எனக்கு ஊக்கம் தந்தார்கள். மன்ஞர் இந்துசமய வளர்ச்சிச் சங்கத்தை, மன்ஞர் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரியை, என்னை உண்மைக் கலைஞனுக்கிய மன்ஞர் வாழ் இரசிகப்பெருமக்களை என்றென்றும் மறக்க முடியாது. என்னைப் பெற்ற மண், பல கலைஞர்களைத் தந்த மண், அதுதான் இணுவைமண்'' என்று கூறிய சிதம்பரநாதன் நாடகக் கலைஞர் மட்டுமல்ல, அவர் ஒரு 'ஆல்ரவுண்டர்!'

— மேகலா

நாடக விமர்சனம்

## தாய்மாமன்

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். நகரமண்டபத்தில் 'நோதேன் சிரோன் கம்பனியார்' அளித்த 'தாய் மாமன்' என்ற சமூக நாடகம் வெற்றிகரமாக மேடையேறியது.

நடிக நடிகையர் எல்லோருமே தங்கள் பாகத்தை திறம்படஏற்று நடித்தனர். சேகரின் நடிப்பு சோகக் கட்டங்களில் பளிச்சிட்டு விளங்கியது.

யாழ்ப்பாணத்து தமிழ் மங்கையர் மேடையேறி நடிப்பதை அருவருத்த காலம் மாறி இன்றுகாதல் கட்டங்களிலும் நடிக்க முன்வந்திருப்பதுவரவேற்கத்தக்கதாகும். காதல் காட்சிகள்விரஸமாயில்லாவிட்டால் பொதுமக்கள் நன்கு விரும்புவார்கள்.

வசன நடையில் கற்பனைப் பொலிவும் விறுவிறுப்பும் இருந்தது குறிப்பிடத்தக்கது. -'பி'

நாடக விமர்சனம்

## ஆலமரம்

''ஒரு குடும்பம்-குடும்பத் தலைவன் குடிகாரனுகிச் சீட்டாட்டத்திலே பொருளெல்லாம் இழந்ததனுல் ஏழ்மையில் வாடிக் கருகும் குடும்பம். தந்தைக்குக் குடும்பத்தைப் பற்றிய கவலையே இல்லை. தாய் தனதுதமையனுரின் பணஉதவிபெற்றுப் புத்திரர்களிருவரையும் படிக்க வைக்கிருள். மூத்தமகனே தந்தையின் அசல்வாரிசு. படிப்பைப்பற்றிய சிந்தனையேயின்றி இன்பந் தேடும் ஒருவனுக அலைகிருன். ... கடைசியில் போராட்டங்கள்ஓய, தன் குடும்பம் உய்ந்துவிடுமென்ற நிம்மதியில் உயிரைவிடுகிருள் அன்னை!!''

— 'வாழ்க்கை வாழ்வதற்கே' என்ற சமுக நாடகத்தை அளித்துப் புகழ்பெற்ற அரியாலை நாடகமன்றத்தின் 2-வதுநாடகமான 'ஆலமரத்தின்' கதைச்சுருக்கம்இதுதான். உருக்கமான கதை. இந்தியக் கதையின் தழுவலாயினும்ஈழத்துச்சமூகத்துக்கு ஏற்றவாறு கதையையும் வசன அமைப்பையுங் கொண்டு சென்றிருக்கிருர், அதற்குப் பொறுப்பான திரு. பி. விஜயரத்தினம். அக் குடும்பத்தின் ஆலமரமாக நின்று அதைக் காக்கும் தாய் பாக்கியமாக திரு. கே. சோமசேகரம் பாகமேற்கிருர். அவருடைய பண்பட்ட நடிப்பே நாடகத்திற்கும் ஆலமரமாகிவிடுகின்றதெனின் மிகையன்று.

மூத்தமகன் சங்கராக நடித்த எம். நவரத்தினமும், தம்பியாக நடித்த திரு. பி. விஜயரத்தினமும் நடிப்பிலே ஒருவருக்கொருவர் சோடைபோகவில்லை. இருவருடைய உருவப் பொருத்தத்துக்கும் ஒரு சபாஷ் போடலாம். அண்ணனின் நிலை கண்டு வருந்தும் சேகரின் நிலை, பி. விஜயரத்தினத்தின் நடிப்பின் மூலமாகச் சுடர் விடுகின்றது. கலங்கும் கண்களுடன் தம்பியை மன்னிப்புக் கேட்க விழையும் அண்ணனின் தோற்றம் பார்ப்போரின் கண்களைப் பனிக்கச் செய்துவிடுகிறது. ரி.குணரத்தினத்துக்கும் பெண்ணுக்கும் வித்தியாசமில்லை. சிறந்த நடிப்பு. ஆனுல் காதல்காட்சிகளில் மிகையாகிவிடுகிருர். தந்தை மாணிக்கத்தின் பாத்திரத்தைப் பிரதிபலிக்கும் திரு. கே. கணேசனின் துடிப்பான நடிப்பிலே, சரித்திர நாடகங்களில்நடித்தஅனுபவம் தலைகாட்டமுனைகிறது. பாடல்கள் இரவல்-ஆனுல் இனியவை.

நாடகத்தின் நகைச்சுவைப்பகுதியை, வஞ்சகமில்லாத பிறவியாகவந்து திருமணத்தைக் குழப்பியடிக்கும் (வெள்ளை) தனபாலசிங்கம் வகையாசக் கவனித்துக் கொள்கிருர். பெண்ணின் தந்தையான திரு. தர்மரத்தினத்தின் நடிப்பிலே பொறுப்புள்ள தந்தையின் லட்சணம் பிரதிபலிக்கிறது. நாடகத்தின் ஒரேயொரு காட்சியிற்ருன் தோன்றினும் தனது தத்ரூபமான, பரபரப்பானகோபாவேச நடிப்பினுல்மேடையையே கலக்கியடித்துவிட்டுப் போகிருர் திரு. எஸ். துரைச்சாமி.

பார்ப்பவர்கள் வீடு செல்கையில் கண்களைத் துடைத்துக் கொள்ளலாம்.

-- கே. ரி. ஐ.

தொடர் கட்டுரை

## வாஹினியில் நான்!

—எஸ். அருமைநாயகம்

கார் மலைப்பாதைகள் வழியே கனவேகத்துடன் செல்கின்றது. பாதையை விட்டு விலகி செங்குத்தான மலைகளிலிருந்து உருண்டுபுரண்டு ஆயிரக்கணக்கான அடிகளுக்குக் கீழே விழுந்து நொருங்குகிறது. உண்மையான காரை இப்படி விழச் செய்து உடைத்தால் பணம் வீணுகும். ஆகவே மலைப்பாதைகள் வழியே கார் வேகமாகச் செல்வதைப் படமாக்கி விடுவார்கள். பின்னர் அந்தமலைப் பாதையின் தோற்றம் எப்படியிருக்கிறதோ அதே மாதிரி களிமண், மக்கு முதலியவைகளைக் கொண்டு ஒரு செயற்கை மலைப்பிரதேசத்தைச் செய்வார்கள். இதுமூன்று நான்கு அடிப்பரிமாணம் உள்ளதாக இருக்கும்.

உண்மையான காரின் தோற்றத்தையொத்த ஒரு குழந்தைகள் விளையாடும் பொம்மைக்காரை வாங்கி அதைச்செயற்கை மலைப் பாதையில் வைத்துத் தள்ளி விடுவார்கள். அது தெருவில் வந்துகீழே உருண்டுருண்டு விழுவதைப் படமாக்குவார்கள். இந்த இரண்டு காட்சிகளையும் எடிட்டர் சரியான இடத்தில் வெட்டிப் பொருத்திவிடுவார். திரையில் பார்க்கும் பொழுது ஒரே கார் ஒரேகாட்சியில் ஓடிவந்து விழுந்து நொருங்குவதைப் போல் காட்சியளிக்கும்.

புகையிரதம் தண்டவாளத்தை விட்டுத்தடம் புரள்வதோ அல்லது பாலம் உடைந்து தண்ணீருக்குள் விழுவதோ இந்த முறையில்தான்படமாக்குவார்கள். பாலம், ஆறுஎல்லாம் மிகச்சிறிய அளவில் ஸ்டுடியோவுக்குள் செய்யப்பட்டிருக்கும். சாவி கொடுத்துப் போட்டுவிட்டால் ஓடக்கூடிய றெயில் அதில் ஓடிவரும். பாலம் உடைந்து விளக்கூடிய நிலையில் பொருத்தப்பட்டிருக்கும். ஏற்கனவே எங்காவது உண்மையான றெயில் விபத்து ஏற்பட்ட பின் அதைப் படமாக்கி வைத்திருப்பார்கள். இரண்டையும் எடிட்டர் இணைத்துவிடுவார். செயற்கைக் காட்சி ''தூரக் காட்சியாக''ப்படம்பிடிக்கப்பட்டிருக்கும். உண்மையான விபத்துக்காட்சியை ''அண்மைக் காட்சி''யாகப் படம் பிடித்திருப்பார்கள். ஆனுல் ''லோரன்ஸ் ஒப் அரேபியா'', ''த றெயின்'', ''பிறிச் ஓன் த றிவர் குவாய்'' ஆகிய ஆங்கிலப் படங்களில் தடம்புரளும் றெயில் காட்சிகளெல்லாம் நிஜமான றெயில் பெட்டிகளை வைத்தே எடுக்கப்பட்டவை.

போர்க்கப்பல்கள் இருபக்கங்களிலும் ஒன்றையொன்று எதிர்த்து நின்று ''பென்ஹேர்'' என்றஆங்கிலப்படத்தில் போரிடுகின்றன. ஒரு பக்கத்திலிருந்து மறுபக்கத்திற்குப் பீரங்கிக் குண்டுகள் பாய்கின்றன. இந்தக்காட்சி ஸ்டுடியோவுக்குள் படமாக்கப்பட்டதே. பெரிய நீர்த் தொட்டியில் தண்ணீர் இறைத்து நிரப்பிக் கடலை உண்டாக்கிஞர்கள். ஐந்தடி நீளமுள்ள கப்பல்கள் தண்ணீரில் மிதக்கவிடப்பட்டு மேற்கூறிய காட்சி படமாக்கப்பட்டது.

''கிங்கொங்'', ''றைகன் அண்ட் த ஸ்வேர்ட்'' ஆகிய படங்களில் வரும் பிரம்மாண்டமான ராட்சசப் பிராணிகள் எல்லாம் சிறிய அளவில் வைத்துப் படமாக்கப்பட்டவையே. ஐம்பதடி உயரமுள்ள ''கிங்கொங்'' என்ற குரங்கு ஓர் அழகிய பெண்ணை தன் உள்ளங்கையில் எடுத்துச் செல்கிறது. அது தெருவில்நடக்கும் போது கட்டிடங்களெல்லாம் அதனிலும் பார்க்கச் சிறியதாகக் காட்சியளிக்கின்றன. உண்மையில் குரங்கு ஓரளவுதான். மூன்றடி உயரமுள்ள சிறிய கட்டிடங்களினூடேகுரங்கு நடந்து செல்லும்போது படமாக்கிஞர்கள்.

[இன்னும் வரும்]




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த வாரத்தில் உங்கள் பலன்

பண்டித வித்துவான் எம். வி, பாலசுந்தரம் பி. ஓ. எல்., எவ். ஆர் ஏ. எஸ்

மேடம்- இவ்விராசியிற் பிறந்தவர்களுக்குஇவ்வாரம் மத்திம பலன்களைத்தரும் வாரமெனலாம். அரசினரால்தொல்லைகளுண்டாகும். வீண்செலவுகள் ஏற்படும். உத்தியோகத்தர்களுக்கு தொழில்களில் பலதொல்லைகளுண்டு. வருமானம் மத்திமமாகவே காணும். போட்டிப்பந்தயவகையினருக்கு காலசுகமில்லை. பெண்களுக்கு யோகவாரம் எனலாம்.

இடபம்- இவ்விராசியிற் பிறந்தவர்களுக்குஇவ்வாரம் மிக நல்லவாரமாகும். திடீர் பிரயாணம் நிகழும். வித்தியாபகுதியினருக்கு கல்வியில் முன்னேற்றம் கிடைக்கும். பொருள்வகையில் ஏமாற்றமடைவர். எல்லாவற்றிலும் பொறுமைவேண்டும். வருமானம் சாமானியமாகவே இருக்கும். தேகசுகம் உண்டு.

மிதுனம்- இவ்இராசியிற் பிறந்தவர்களுக்கு இவ்வாரம் மத்திம பலன்தரும் வாரமாகும். தேகாரோக்கியம் நன்ருகவே இருக்கும். கடவுட்கொள்கையும் நம்பிக்கையும் உண்டாகும். இலாபகரம் மத்திமமாகவே இருக்கும். பொருள்வகையில் பல சிக்கல்கள் உண்டு. ஊதிபம் குறைவுறும். பெண்களுக்கு இது நல்ல வாரம். புகழ், கௌரவமுண்டு, பந்தய வகையினருக்கு இலாபமுண்டு.

கடகம்- இவ்இராசியிற் பிறந்தவர்களுக்குஇவ்வாரம் மிகநல்லவாரமாகும். தேகசுகமுண்டு. போதிய வருமானம் உண்டாகும். குடும்பத்தில் பலதொல்லைகள் இடையிடையே உண்டு. கடன் தொல்லைகள்நீங்கும். தந்தையால் கவலையேற்படும். பெரியோரும் நண்பரும் உதவிபுரிவார்கள். பந்துக்களால் குடும்பக்கௌரவ மேற்படும். தனதுஉள்ளக்கருத்தை மறைத்தல் நன்மைதரும்.

சிங்கம்- இவ்விராசியிற் பிறந்தவர்களுக்குஇவ்வாரம் மத்திம பலன்தரும் வாரமெனலாம். உடல்நலம்சிறிது காணப்படும். மனஸ்தாபப்படுவார்கள். வீண்பிரயாசம் உண்டு. தூரப்பிரயாணங்களை விலக்குதல் நன்மைதரும் உத்தியோகவகையினருக்குப் பொதுவாகப்பல தொல்லைகளுண்டாகும். பந்தயவகையினர்கள் ஈடுபாடின்றி இருத்தல் நன்மைதரும்.

கன்னி- இவ்இராசியிற் பிறந்தவர்களுக்கு இவ்வாரம் அற்ப பலன்தரும் வாரமெனலாம். தேகாரோக்கியம் குன்றவடையும். கல்வியாளர்களுக்கு நற்காலம் என்ற சொல்லலாம். வழக்குவகையில் பலதொல்லையும் பொருட்செலவும் ஏற்படும். நம்பிக்கையை யாரிடமும் வைத்தல் நல்லதல்ல.

துலாம்: இவ்விராசியிற் பிறந்தவர்களுக்கு இவ்வாரம் சிறந்த, பலன்தரும் வாரமாகும். உடல் நலம் சிறிது பாதிக்கப்படும். வருவாய்க்கு மிதமிஞ்சிய செலவுண்டாகும். தொழில்வகையினருக்கு மேன்மையுண்டு. உத்தியோக வகையினருக்குப் பதவியும் நன்மதிப்புமுண்டு. செல்வாக்குமிகுந்த வாரமெனலாம். பொருள் வகையில் திருப்திகரமுண்டாகும். பெண்களுக்குப் பல தொல்லைகள் நீங்கும்.

விருச்சிகம்: இவ்விராசியிற் பிறந்தவர்களுக்கு இவ்வாரம் இன்னல்பலநிறைந்து காணும் வாரமெனலாம் உஷ்ணசம்பந்தத்தால் தேகசுகம் சிறிது பாதிக்கப்படும். போசனக்குறைவுண்டு. [illegible] பகையை யேற்படும். கடன்தொல்லையுண்டு. உத்தியோக வகையினருக்குப் பல தொல்லைகளுண்டாகும். நன்மைதரும். குடும்பத்தில் மனக்கசப்புண்டாகும்.


தனு: இவ்விராசியிற்பிறந்தவர்களுக்கு இவ்வாரம் நற்பலன்களைத் தரும் வாரமெனலாம். தேகாரோக்கியம் பித்தத்தால் பாதிக்கப்படும். உத்தியோகவகையினருக்குச் செல்வாக்குக்குறைவடையும். சூதுபந்தயங்களில் ஈடுபாடுடையோர் விலகுதல் நன்மை தரும். காரியானுகூலம் ஏற்படும். ஊக்கமாக இருக்கவும்.

மகரம்: இவ்விராசியிற் பிறந்தவர்களுக்கு இவ்வாரம் மத்திம பலன்தரும் வாரமெனலாம். குடும்பத்தில் வீண்குரோதங்கள் நிகழும். பொருள் வகையில் செலவுகள் ஏற்படும். குடும்பத்தில் சுகம் இருப்பினும் தொல்லைகள்இடையிடையேயுண்டு. பகைவர்கள் தொல்லையேற்படும். வியாபாரவகையினர் பிரயாணத்தை விலக்கவும். பொருள் இழக்க நேரிடும். உத்தியோக வகையினருக்கு வருமானம் குறையும்.

கும்பம்: இவ்விராசியிற் பிறந்தவர்களுக்கு இவ்வாரம் நல்ல பலன்களைத் தரும் வாரமாகும். தேகசுகமுண்டாகும். மனக்கஷ்டமுண்டு. கூட்டுவியாபாரிகளுக்கு நன்மைகள் உண்டு. வாரஇறுதியில் தொல்லைகளுண்டாகும். எவ்விதகஷ்டமும் சாமானியமாகச் சமாளிக்கப்படும். பிரபுக்கள், நண்பர்களால் ஆதரவுண்டு.

மீனம்: இவ்விராசியிற் பிறந்தவர்களுக்கு மிக்க கஷ்டபலன்களைத்தரும்வாரமெனலாம். உடல்நலம் குறைவடையும். இரத்தக் கொதி சிலருக்குண்டாகும். வியாபாரம் மந்த நிலை காணும். நட்டமும் உண்டு. தொழில்கஷ்டமும் பதவித் தடையும்அரசாங்கத்தொழிலில் உள்ளார்க்குண்டு.

## மலேஷியா செல்கிறார்



யாழ்ப்பாணக் கல்லூரி இசைத் தமிழாசிரியர் கதாகாலக்ஷேபமணி தா. பொன்னம்பலம் மலேஸியா செல்கிறார். மலேஸியாவில் தமிழர் வாழ் ஊரெல்லாம் கதாப்பிரசங்கங்கள் நிகழ்த்தவிருக்கிறார். இவர் நான்கு மாதங்கள் அங்கு தங்குவார்.


இளம் பற்களை
உரமாக
வளரச்
செய்யவும்


பெரும்பான்மையான பற்கள் அழுகியல்ல, ஆனல் ஈறு வியாதிகளினலேயே இழக்கப்படுகின்றன என உங்கள் பல் வைத்தியர் கூறுவார்.

உறுதியான ஆரோக்கியமுள்ள ஈறுகளிலிருந்தே சிறுவர்களுக்கு உரமான வெண்பற்கள் வளரும். பற்களை வெண்மையாக துலக்கவும் ஈறுகளை உறுதியாக தேய்க்கவும் போர்ஹான்ஸின் பாதுகாப்பு என்றும் அவர்களுக்கு அவசியம்.


உறுதியான
ஆரோக்கியமுள்ள
ஈறுகளுக்கும் உரமான
வெண்ணிறப் பற்களுக்கும்

என்றும் பாவியுங்கள்.

**போர்ஹான்ஸ்**
பற்பசை




புகழ்பெற்ற பல் வைத்தியர் ஒருவரின் தனித் தயாரிப்பு முறைக்கு தயாரிக்கப்பட்டது. இதில் ஈறுகளை காக்கும் விசேட மருந்துகள் சேர்ந்துள்ளது.



உரம் பற்களை
என்றும்
இளமையுடன்
காக்கவும்


உரம் பற்கள், உறுதியான ஆரோக்கியமுள்ள ஈறுகள் இருக்கும்வரை உரமாக இருக்கும். பெரும்பாலான பற்கள் அழுகியல்ல, ஆனல் ஈறு வியாதிகளினலேயே இழக்கப்படுகின்றன என உங்கள் பல் வைத்தியர் கூறுவார்.

பற்களை வெண்மையாக துலக்கவும், ஈறுகளை உறுதியாக தேய்க்கவும் போர்ஹான்ஸின் பாதுகாப்பு என்றும் உங்களுக்கு அவசியம்.

உறுதியான
ஆரோக்கியமுள்ள
ஈறுகளுக்கும் உரமான
வெண்ணிறப் பற்களுக்கும்

என்றும் பாவியுங்கள்.

**போர்ஹான்ஸ்**
பற்பசை




புகழ்பெற்ற பல் வைத்தியர் ஒருவரின் தனித் தயாரிப்பு முறைக்கு தயாரிக்கப்பட்டது. இதில் ஈறுகளை காக்கும் விசேட மருந்துகள் சேர்ந்துள்ளது.

824/67


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி நவிலல்

### அட்வக்கேற் ரி. கணேசலிங்கம்

யாழ்ப்பாணம் பிரபல வழக்கறிஞர் ரி. கணேசலிங்கம் அவர்களின் இறுதிச் சடங்கில் நேரில் கலந்துகொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், மற்றும் பல வழிகளில் உதவியவர்களுக்கும்அன்னாரது குடும்பத்தினர் தமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறார்கள். தனித்தனியே நன்றி தெரிவிக்க முடியாமைக்கு வருத்தம் தெரிவிக்கிறார்கள்.

இங்ஙனம்
சகோதரர்.

1091

## அறிவித்தல்

பல்லவராயன்கட்டுக் கிராமசபையின் பரிபாலனத்தில் உள்ள12-ம்கட்டைப்பாதை றேட்டமைப்பு வேலைக்கு ஒப்பந்தம்அழைக்கப்படுகின்றது.

25-4-67 திகதி பிற்பகல் 1மணிவரைக்கும்இவ்வேலைக்குரிய கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

1. கேள்விப்பிணைப்பணம் ரூபா 50-00.
2. கேள்விப்பத்திர விலை ரூபா 5-00.

கேள்விப்பத்திரங்கள் 27-4-67 திகதி காலை 10 மணிக்குப்பிந்தாமல்அக்கிராசனரிடம் சேர்த்தல்வேண்டும்.

குறைந்த கேள்விக்காரருக்கே ஒப்பந்தம் முடிவு செய்யப்படும். கேள்வியில் வெற்றிபெற்றோர் 2 வாரங்களுக்குள் பிணைப்பணம் கட்டி ஒப்பந்தம் செய்து கொள்ள ஆயத்தமுள்ளவராதல் வேண்டும்.

இன்னும் வேண்டிய விபரங்கள் இவ்வேலைகுறித்து வடபிரதேசம் உள்ளூராட்சி உதவி அதிபர் அவர்களுடைய செயலகத்திலும், பல்லவராயன்கட்டுக் கிராமசபை அலுவலகத்திலும் ஒட்டப்பட்டிருக்கும் கேள்வி விளம்பரங்களில் வாசித்தறிந்து கொள்ளலாம்.

சி. முகம்மதுஅப்துல்காதிர்,
[ஒப்பம்]
அக்கிராசனர்,
பல்லவராயன்கட்டுக்கிராமசபை,
கி. ச. அலுவலகம்,
வேரவில்.

13-4-67. 1742

## முகாமையாளர் தேவை

தகைமைகள்:- சிரேஷ்ட தராதரப் பத்திரத்துடன் கூட்டுறவுப் பயிற்சியும் எண்கணிதத்தில் திறமையும் விரும்பத்தக்கது.

வயது:- 20—35.

பிணை:- ரொக்கம் ரூபா 1000-00

ஆதனப் பிணை:- ரூபா 1000-00

முடிவு திகதி:- 25-4-67.

வேதனம்:- ரூபா 100-00 எல்லாம் உட்பட. திறமைக்கேற்ப விரைவில் கூட்டப்படும்.

விண்ணப்பங்கள் யாவும் தலைவர், கணேஷபுரம் பலநோக்குக்கூட்டுறவுச்சங்கம், கிளிநொச்சி என்னும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பப்படவேண்டும்.

1741


மனோஹரா
[யாழ்ப்பாணம்]
தினசரி 2 காட்சிகள்
போயா தினங்களில்
3 காட்சிகள்
எம்.கே.ராதா-புஷ்பவல்லி
நடித்த
சம்சாரம்

REGAL - JAFFNA
Yul Brynner &
Richard Widmark
in
FLIGHT FROM
ASHIYA
Time: 4-15, 7-00, 9-45 p. m.

4-வது வெற்றி வாரம்

கெப்பிட்டல் [கொழும்பு] பிளாஸா [வெள்ளவத்தை] நவா. [கொம்பனித்தெரு]
வெம்பிளி [கண்டி] மொடேன் [பதுளை] நியூசினிமா [குருநேகலை]
விஜயா [மட்டக்களப்பு] ஸ்ரீகிருஷ்ண [திருமலை]
கிங்ஸ்லி [கொழும்பு]
வெலிங்டன் [யாழ்ப்பாணம்]

சோதனைச் சுழலிலே சோதரர் இருவர்!
வேதனை விளிம்பிலே மாதர்கள் இருவர்!!
ஆண்டவனுக்கு சவால் விட்டான் ஒருவன்!
அண்ணனையே தடுமாறவைத்தான் ஒருவன்!!
கள்வனைக் காதலித்தாள் ஒருவள்!!

ஜெய்சங்கர் — எல். விஜயலக்ஷ்மி
மனோகர், அசோகன், வசந்தா,
தங்கவேலு, மனோரமா, கருணாநிதி
மற்றும் பலர் நடிக்கும்

இரு வல்லவர்கள்


## வருடாந்த பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், திங்கள் மாதகல் சந்தை பண்டத்தரிப்பு விநாயகர் சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் திரு. மா. செல்லப்பா தலைமையில் நடைபெற்றது.

புதுவருட உத்தியோகத்தர் விபரம்:-தலைவர்:- திரு. பொ. கந்தசாமி, உபதலைவர்: திரு. மா. கதிரன், காரியதரிசி- திரு தா. தர்மலிங்கம், உபகாரியதரிசி:-திரு. மு. அருச்சுனன், தனதிகாரி:- திரு. இ. சிவகுரு. கணக்குப்பரிசோதகர்:- திரு. மு. தெய்வேந்திரன், நிலையபாதுகாவலர்:- திரு. இ. சின்னத்தம்பி. 5 பேர் கொண்ட நிர்வாகசபை தெரிவு செய்யப்பட்டது.

### குளிர்த்திவிழா

பண்டத்தரிப்பு, சனிகவணுவத்தை வைரவ கோவிலில் குளிர்த்திவிழா சிறப்பாக நடை பெற்றது. இதனையொட்டி விசேஷ ஆராதனைகளும் அன்னதானமும் நடைபெற்றன.

# வரி விளம்பரம்

## தேவை

பெண் நெசவாளர்கள்
நெசவு வேலையில் அனுபவமுள்ள பெண்கள் தேவை. 18-5-67 நேரில் வரவும். ஜோதிஸ்ரோஸ், மாலிசந்தி, அல்வாய். 1910

மணமகன்
12-ல் செவ்வாய்க்குப் பொருத்தமான 22—30 வயதுக்குட்பட்ட மணமகன் சிறந்த சைவவேளாள குலத்தில் தேவை. விளம்பர இல. 1908, 'ஈழநாடு' மே/பா., யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு எழுத்து மூலம் சகல விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். 1908

நெசவாளர்கள்:
நெசவுத்தொழிலில் அனுபவமுள்ள பெண் நெசவாளர்கள் உடனடியாகத் தேவை. நற்சாட்சிப்பத்திரங்களுடன் நேரில் வரவும். ராமகிருஷ்ண இன்டஸ்றீஸ், ''ராமகிருஷ்ண பவனம்'', கொக்குவில் கிழக்கு, கொக்குவில். அல்லது செ. காசிப்பிள்ளை, ஆ. அப்பையா அன்கோ, 82, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 1914

## விற்பனைக்கு

காணி:
நாவற்குழிஸ்ரேஷனுக்குப் பக்கத்திலுள்ள கண்டி றேட்டில் ஒரு ஏக்கர் காணி விற்பனைக்குண்டு. பங்காகவோ அல்லது முழுவதாகவும் கொடுக்கலாம். ரட்ணம், 151, மெயின் வீதி, யாழ்ப்பாணம். 1902

வீட்டுக் காணி
9 பரப்பு வீட்டுக் காணி யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியடியில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு, பூகன்ஸ்-71, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். தொடர்புகொள்க. 1904

தென்னந்தோட்டம்
50 ஏக்கர் இளந்தென்னந்தோட்டம் இயக்கச்சி கண்டி பிரதான வீதியில் விற்பனைக்குண்டு. பெரிய கிணறு பரவலாக வாய்க்காலும் உண்டு. வாங்கவிரும்புபவர்கள், பூகன்ஸ்-71, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொடர்பு கொள்க. 1905

கார்
CL ஒஸ்டின் A40 டிவோன் பெண் பாவனையில் மிகவும் திறமையான நிலையில் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: 82, ருஜகிரியா றேட், ருஜகிரியா, கொழும்பு. 1909

காணி:
வேலணை கிழக்கு அரசினர் பிரசவ விடுதிக்கு அருகாமையிலே இருக்கும் மண்சிவந்தான் காணி 23 பரப்பு விற்பனைக்கு உண்டு. பரப்பு ரூபா 500/- விலாசம் சன்லைட் டையேஸ் அன்றைக்கிளீனஸ் ராணித் தியேட்டருக்கு அருகாமையில் யாழ்ப்பாணம் போன் 474 தந்தி றைக்கிளீன். 1911

தளபாடங்கள்
ச. பொன்னம்பலம், 91 நிர். கஸ்தூரியார் றேட், லேக்வியூ ஒட்டல் மேல்மாடியில், யாழ்ப்பாணம். றங்கூன் தேக்கினால் புதிதாகச் செய்யப்பட்ட தற்காலிக டிசையினில்அலுமாரிமூன்று, கதிரை 4, செட்டி குசைன் நாற்காலி 3 விற்பனைக்கு இருக்கிறது. விலை கோரவும். காலை 6 மணி முதல் 8 மணி வரையிலும், பிற்பகல் 4-30 இருந்து 6 மணிவரை பார்வையிடலாம். 1913

## கல்வி

சிங்கள வகுப்பு:
எமது கலாசாலையில் ஆரம்ப சிங்கள வகுப்பு ஒன்று அண்மையில் ஆரம்பிக்கவிருக்கிறது. கல்வி பயில விரும்புவோர் ஆசிரியரோடு கலந்தாலோசிக்கவும். A. P. டானியல், தபாற்கந்தோரடி, கரவெட்டி. 1688

## காணவில்லை

12-4-67 புதன்கிழமை இரவு மிருசுவிலுக்கும் எழுதுமட்டுவாளுக்கும் இடையில் ஒரு 'டிரக்ரர்' பெட்டிப் பின்கதவுகைதவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து த. நாகலிங்கம், ஒட்டுவெளி, மிருசுவில் என்ற விலாசத்துக்கு அறிவித்தால் போதிய சன்மானம் கொடுத்துப் பெற்றுக் கொள்ளப்படும். 1906

## தேவை

பரதநாட்டிய ஆசிரியர்:-
காலாசேத்திர தராதரப் பத்திரம் உடையவர் அல்லது கலாசேத்திர பாணியில் பயிற்றப்பட்ட பரதநாட்டிய ஆசிரியர் தேவை. வேதனம் தராதரத்திற்குத் தக்கபடி வழங்கப்படும். விளம்பர இலக்கம் 1903, 'ஈழநாடு' மேற்பார்த்து என எழுத்துமூலம் விண்ணப்பிக்கவும். 1903

# பாட்மின்ரன் சுற்றுப்போட்டி இறுதி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு யாழ்ப்பாணம்வை. எம். சி. ஏ. பாட்மின்ரன் விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற பாட்மின்ரன் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டிகள் வடமாகாண பொலிஸ் சுப்றின்டன் திரு. ஆர். சுந்தரலிங்கம் தலைமையில் வை. எம். சி. ஏ. விளையாட்டுத்திடலில் நடைபெற்றன. நடைபெற்று முடிந்த 12 இறுதிப் போட்டிகளிலும் வெற்றி பெற்ற வீரர்களுக்கும் வீராங்கனைகளுக்கும் திருமதி சுந்தரலிங்கம் பரிசில்களை வழங்கினர். போட்டிகளில் வெற்றி பெற்றோர் விபரங்கள் வருமாறு:- கீழ்ப் பிரிவு ஆண்கள்ஒற்றை ஆட்டத்தில் எம். ராமதாசை எதிர்த்துப் போட்டியிட்ட ஆர். சிவாஜி வெற்றி பெற்றார். மத்தியபிரிவு ஆண்கள் ஒற்றைஆட்டத்தில் சி. சி. ஆனந்தஜெயாவை எதிர்த்துப்போட்டியிட்டஎஸ். ஜெயேந்திரன் வெற்றி பெற்றார். ஆண்கள் பொது ஒற்றைக் ஆட்டத்தில் ரி. கணேசை எதிர்த்துப் போட்டியிட்ட எஸ். ஜெயேந்திரன் வெற்றி பெற்றார். ஆண்கள் பொது இரட்டை ஆட்டத்தில்சி. சி. ஆனந்தஜெயாவையும், ரி, கணேசையும் எதிர்த்துப் போட்டியிட்ட சி. சுவேந்திரனும், எஸ் ஜெயேந்திரனும் வெற்றி யீட்டினர்.

ஆண் பெண் ஆட்டத்தில் திரு. ரி. ஈஸ்வரனையும், செல்வி எஸ். கண்ணுத்துரையையும், திரு. என். சிவபாதமும் செல்வி ஆர் சபாரத்தினமும் வெற்றி யீட்டினர்.

பெண்கள் ஒற்றை ஆட்டத்தில் செல்வி செகராசசிங்கியை எதிர்த்துப் போட்டியிட்ட செல்வி. ரெட்னசிங்கம் வெற்றி பெற்றார். மேற்பிரிவு பெண்கள் ஒற்றை ஆட்டத்தில் செல்வி. ரெட்னசிங்கத்தை எதிர்த்துப் போட்டியிட்ட செல்வி-செகராசசிங்கி வெற்றி பெற்றார். பெண்கள் இரட்டை ஆட்டத்தில் செல்வி-செல்லத்தம்புவையும், செல்வி. ஆர். சபாரத்தினத்தையும்செல்வி. செகராசசிங்கியும், செல்வி. பஸ்தியாம்பிள்ளையும் வெற்றியீட்டினர்.

ஆண்கள் ஒற்றை ஆட்டத்தில் சி சி. ஆனந்தஜெயாவை ரி. ஈஸ்வரன் வெற்றியீட்டினார். ஆண்கள் பொதுஒற்றை ஆட்டத்தில் லக்ஸ்மன் ஜோன்பிள்ளை ரி. ஈஸ்வரனைத் தோற்கடித்தார். ஆண்கள் இரட்டை ஆட்டத்தில் சி. சி. ஆனந்தஜெயா ரி. கணேசன் ஜோடியையரி. ஈஸ்வரன், எஸ். நிமலன்ஜோடி வெற்றியீட்டியது. ஆண்கள் பொது இரட்டை ஆட்டத்தில் சி. சி. ஆனந்தஜெயா, சி. சுவேந்திரன் ஜோடியை என். சிவபாதம், அலெக்ஸ் தம்பிராஜா ஜோடி வெற்றியீட்டியது.

## சேவை நலம் பாராட்டு

அச்சுவேலி, திங்கள் அச்சுவேலி ஸ்ரேஷன் பாடசாலையில் சுமார் இரண்டு ஆண்டுகள் ஆசிரியராகக் கடமையாற்றி தோப்பு அருள்நந்தி வித்தியாசாலைக்கு இம்மாத இறுதியில் இடமாற்றலாகச் செல்லவிருக்கும் திரு. கு. கனகரத்தினத்துக்கு சென்ற14-ம் திகதி ஸ்ரேஷன் பாடசாலையில் தலைமையாசிரியர் திரு. எஸ். வி. வேலுப்பிள்ளை தலைமையில் பிரிவுபசாரக் கூட்டமொன்று நடத்தப்பட்டது. இவ்வைபவத்தில் பேசிய தலைமையாசிரியர் திரு. கனகரத்தினத்தின் கடமைஉணர்ச்சியையும் சமயபக்தியையும் பாராட்டிப் பேசினார். மற்றும் பலரும் அவரது சேவையைப் பாராட்டிப் பேசினர். திரு. கனகரத்தினம் பாராட்டுதல்களுக்கு நன்றி தெரிவித்தார்.


ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி 2-30, 6-30, 9-45
போயாதினங்களில் 4காட்சிகள்
எஸ். எஸ். ஆர் -விஜயகுமாரி
நடித்த
ஆனந்தி

நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
எஸ். எஸ். ஆர்-விஜயகுமாரி
நடித்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மக்கள் நலனுக்கு ஆபத்து நேர்ந்தால் வெளியேறுவோம்'

## தீவுப்பகுதி எம். பி. தகவல்

நாரந்தனை, ஞாயிறு

''தொழிற்கல்வி என்ற பெயரால் தமிழ் மாணவர்களை ஏமாற்றி, அவர்களின் பட்டப் படிப்புக்கு முற்றுப்புள்ளி வைக்க இந்த அரசாங்கம் முயல்கிறது. எதிர்காலத்தில் தமிழ்ப்பட்டதாரிகளையே நாம் காண முடியாது. எனவே, தொழிற்கல்வி நமது மாணவர்களின் நலனைப் பாதிக்கக்கூடாது.''

இவ்வாறு புளியங்கூடல் சனசமூக நிலைய 20-வது ஆண்டு விழாவில் பேசிய தீவுப்பகுதி பாராளுமன்ற உறுப்பினர் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''ஒரு மாணவனின் திறமையை 14-வது வயதில் எப்படிக் கணிக்கமுடியும். எந்த ஒரு உளநூல் ஆசிரியரோ, பெற்றோரோ, மாணவனின் திறமையைக்கணிக்க இயலாதபோது, தம்மால் அதை கணிக்க இயலும் என அரசாங்கம் கருதுகிறது. இது தவறு. தமிழ் மக்களையும், தமிழ் மாணவர்களையும் மட்டம்தட்டும்முயற்சி. எனவேதான் நாங்கள் அதை எதிர்த்தோம். தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஒரு கட்சின் உறுப்பினர் இப்படிப்பேசலாமா என நீங்கள் எண்ணக்கூடும்.

தமிழ் மக்களின் நலனில் இந்த தேசிய அரசுகைவைக்கும் பட்சத்தில் இந்த அரசாங்கத்தைவிட்டு வெளியேற நாம் தயங்கமாட்டோம்.

# கூட்டத்துள் புகுந்து பொலிசார். . .

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

டாம் தடிகளால் தாக்கத் தொடங்கினர். இதனால் கூட்டத்தினர் நாலா திசையிலும் கலைந்து ஓடத் தொடங்கினர். பொலிசார் கூட்டத்தைத் தாக்கிக் கொண்டு பேச்சாளர்கள் அமர்ந்திருந்த மேடைக்கு வந்தனர். ஒரு கான்ஸ்டபிள் எனது தலையில் அடிக்க ஓங்கியபோது கையைக்கொடுத்துத்தடுத்தேன், அடி கையில் விழுந்தது. அத்தருணம் இன்ஸ்பெக்டர் பத்திரானா மேடைக்கு வந்தார். அவரைப் பார்த்து என்ன காரணத்திற்காக இச்செயலைச் செய்கிறீர்கள் என வினவினேன். அவர் எனதுபேச்சில் அக்கறை செலுத்தவில்லை. அந்நேரத்தில் கீழேவிழுந்து எழுந்துகொண்ட எம். பி. யும், அங்கு நின்றுகொண்டிருந்த பட்டினசபைத்தலைவரி ஆகியோரும் இன்ஸ்பெக்டரைப்பார்த்து முறையற்றசெயலைஎன்னகாரணங்கொண்டு செய்கிறீர்கள் என்று கேட்டனர்.''

இவ்வாறு வல்வெட்டித்துறை துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் மரணமான இராமசாமிப்பிள்ளையின் மகன் சிவஞானசுந்தரத்தின் மரணவிசாரணை பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராஜா முன்னிலையில் இன்று தொடர்ந்து நடைபெற்றபோது சாட்சியமளித்த வல்வெட்டித்துறை சனசமூகசேவா நிலையத்தலைவர் திரு. எஸ் ஞானமூர்த்தி தெரிவித்தார்.

திரு. ஞானமூர்த்தி தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

### 'இன்ஸ்பெக்டர் எம்மை பூட்டிவைத்தார்'

'அப்போது பொலிசாரும் இராணுவத்தினரும் கற்களை நாலாதிசைக்கும் வீசிக்கொண்டிருந்தனர். அக்கற்களினால் அவர்களின் ஜீப் வண்டிகளுக்கும், கடைகளுக்கும், வீடுகளுக்கும் எறி விழுந்தன. அதே நேரத்தில் சார்ஜண்ட் இராசரத்தினம் துப்பாக்கியினால் சுட்டார். அத்தருணம் இன்ஸ்பெக்டர் பத்திரானா ஒரு பெட்டியைத் திறந்து வெடி குண்டுகளை எடுத்துக் கொடுத்தார். தொடர்ந்து துப்பாக்கி வெடிச் சத்தம் நடந்து கொண்டே இருந்தது. அந்நேரத்தில் கான்ஸ்டபிள் ஒருவர் சார்ஜண்ட் இராசரத்தினம் வைத்திருந்த துவக்கைப் பறித்து என்னைச் சுடப்போவதாகப் பயமுறுத்தினர். மேடையில் நின்றுகொண்டிருந்த எங்களை சனசமூக நிலையத்திற்குள் செல்லும்படி இன்ஸ்பெக்டர் பத்திரானா உத்தரவிட்டார். அதன்படி நான், எம். பி., இன்னும் சிலர் உட்சென்றதும் அவர் வாசல் கதவைப் பூட்டி வாசலில் ஒரு கான்ஸ்டபிளை நிறுத்திவைத்தார். அதன் பின்னரும் துப்பாக்கி வெடிச் சத்தம் கேட்டுக்கொண்டே இருந்தது.

நான் இடையிடை வாசல் கதவு மூலம் கடைகளுக்கு எறி விழுவதைக் கவனித்தேன். துப்பாக்கிச்சூடு ஆரம்பித்த சுமார் 20 நிமிடத்தின்பின் இன்ஸ்பெக்டர் காயத்துடன் அறைக்குள் வந்தார். அதன் பின்னர் சிறிது நேரத்தால் சார்ஜண்ட் இராசரத்தினமும் காயத்துடன் வந்தார். காயத்துடன் அறைக்கு வந்த இன்ஸ்பெக்டர், காயத்திலிருந்து வடிந்த இரத்தத்தை சுத்தம் செய்துவிட்டு அறைக்கு வெளியில் மீண்டும் சென்றார். அவர் வெளியில் செல்லும்போது வெளிப்புறம் அமைதியாகவே இருந்ததை அவதானிக்கக் கூடியதாகவிருந்தது.

### 'சூட்' என்ற சப்தம் கேட்டது'

அமைதி நிலவிய சமயத்தில் திடீரென ஒரு வாகனம் நிறுத்தப்பட்ட சத்தம் கேட்டது. சில நிமிடத்தால் 'சூட்' என்ற சப்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து துப்பாக்கி வெடிச் சத்தம் கேட்டது. நிலையத்திற்குள் நிற்கும் சமயத்தில் ஒரு இராணுவ வீரர் எம். பியை அடிக்கப்போவதாகப் பயமுறுத்தினர். சிறிது நேரத்தின்பின் அவ்விடத்திற்கு உதவி பொலிஸ் சுப்ரிண்டன்ட் லியனகே வந்தார். அவ்விடத்தில் வைத்து என் முன்னிலையிலும் எம். பி. முன்னிலையிலும் தகாதவார்த்தைகளை அவர் உபயோகித்தார். நள்ளிரவில் பொலிசார் என்னை வாய் முறைப்பாட்டை தரும்படி கேட்டதற்கிணங்க வாய் முறைப்பாட்டைக் கொடுத்தேன். பொலிசாருக்கும் எங்களுக்கும் அந்நேரத்தில் நிலைமை திருப்தியில்லாத காரணத்தால் நடந்த முழு விபரத்தையும் அவ்விடத்தில் பொலிசாருக்கு நான் சொல்ல விரும்பவில்லை.)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

### மரணமானர்

மாவிட்டபுரம், ஞாயிறு

சுன்னாகம் வாணவெடி விபத்தில் காயமடைந்த பாலர் கந்தசாமியும் நேற்று மரணமானர்.

# பெற்றோல்....

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பெக்டர் ஜீப்பிலிருந்து இறங்கி, எறியவேண்டாமெனச் சொன்னார். அவர்கள் தொடர்ந்தும் எறிந்து கொண்டேயிருந்தார்கள். எனக்கும் வலது பக்க காலிலும் இடது பக்க கையிலும் கல் எறி விழுந்தது. நிலைமை கட்டுக்கடங்காததால் குண்டாந்தடிப்பிரயோகம் செய்யப்பட்டது. அதைத் தொடர்ந்து பெற்றோல் நிலையப் பக்கத்தால் முதலில் துப்பாக்கி வெடிச் சத்தம் கேட்டது. இதனால் நாங்களும் துப்பாக்கி உபயோகிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. சிறிது நேரத்தில் இன்ஸ்பெக்டர் காயப்பட்டார். பின்னர் சார்ஜண்ட் இராசரத்தினமும் காயமடைந்தார். சம்பவம் நடந்த இடத்திற்கு உதவி பொலிஸ் சுப்ரிண்டன்ட் வந்தார். அங்குள்ள நிலைமையை அவர் அறிந்தார். எனது முறைப்பாட்டை தலைமை இன்ஸ்பெக்டர் மூர்த்தி பதிவு செய்தார்.

சார்ஜண்ட் புளற்றும் சாட்சியமளித்தார்.

மேல்விசாரணை இம்மாதம் 20ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

### கும்பாபிஷேகம்

கரவெட்டி, ஞாயிறு

இம்மாதம் 23-ம் திகதி கரவெட்டி நுணுவில் பிள்ளையார் கோவில் கும்பாபிஷேகம் நடைபெறவிருக்கிறது. வேதாரணியம் சிவஸ்ரீ வே. தியாகராசாக்குருக்கள் தலைமையில் கும்பாபிஷேகம் நடைபெறும்.

### மலேசிய பிரதமர் . . .

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

அப்துல் ரஹ்மான் தமது பாரியாருடன் இன்று காலை 8-40க்கு கப்பல் மூலம் கொழும்பு வந்துசேருவார்.

பிரதமர் துங்குவுடன் தொழில் மந்திரியும் இங்கு விஜயம் செய்கிறார், நான்கு நாள் விஜயத்தை மேற்கொண்டு இங்கு வரும் மலேசியப் பிரதமருக்கு பெரும் வரவேற்பளிக்க ஏற்பாடுகள்செய்யப்பட்டுள்ளன.

# உடுப்பிட்டியில் நவீன விளையாட்டரங்கு

## மந்திரி சுகததாசா உறுதி

உடுப்பிட்டி, ஞாயிறு

உடுப்பிட்டியில் பத்தாயிரம் பேர் இருந்து நிகழ்ச்சிகளைக் கவனிக்கக்கூடிய நவீன விளையாட்டு அரங்கு ஒன்றை அடுத்த வருடத்துக்குள் அமைத்துத்தருவதாக தேசிய சேவைகள் அமைச்சர் திரு. வி. ஏ. சுகததாசா உடுப்பிட்டியில் நேற்று வாக்குறுதியளித்தார்.

உடுப்பிட்டி வாலிப முன்னணியின் புதுவருடக் களியாட்ட விழாவின் இறுதி நாள் நிகழ்ச்சியான பரிசளிப்பு விழா நேற்றிரவு கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் உடுப்பிட்டி எம். பி திரு. மு. சிவசிதம்பரம் தலைமையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக தேசிய சேவைகள், விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. வீ. ஏ சுகததாசா கலந்து கொண்டார்.

வெல்லன் வெளியிலிருந்து அமைச்சரும், திருமதி சுகததாஸாவும், உடுப்பிட்டி எம். பி திரு, மு. சிவசிதம்பரமும் அலங்கரிக்கப்பட்ட டிராக்டரில் ஊர்வலமாக அரசடி வீதியிலிருந்து நெல்லியடி ஊடாக விழா நடைபெறும் மைதானத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட வழியெங்கும் பொதுமக்கள் திரண்டுநின்று உற்சாகமான வரவேற்பளித்தார்கள்.

தேசிய சேவை அமைச்சர் திரு. வீ. ஏ. சுகததாஸா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

எனதுஅமைச்சு ஒவ்வொரு காரியாதிகாரி பிரிவுக்கும் உடற்பயிற்சிப் பிரிவுகளை உண்டாக்கி வருகிறது. உடுப்பிட்டித்தொகுதியில் விளையாட்டரங்கு நிறுவுவதற்கு 10 ஏக்கர் முடிக்குரிய காணியை விலைக்கு வாங்கி அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டுள்ளேன்.

உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் பேசுகையில், பொலிஸார் வல்வெட்டித்துறையில் நடந்துகொண்ட முறை காட்டுமிராண்டித்தனமானது. வல்வெட்டித்துறையில் கொடூர செயல்களில் இறங்கிவரும் பொலிஸார் உடுப்பிட்டித் தொகுதியிலும் தமது கைவரிசையைக் காட்டக்கூடும் என்றார்.

முத்தமிழ், உப-உணவுப் போட்டியில் வெற்றியீட்டியவர்கட்குத் திருமதி. சுகததாஸா பரிசில்கள் வழங்கினார்.

விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்கட்கு டாக்டர் பயஸ்வஸ்தியாம்பிள்ளைபரிசில்களைவழங்கினார்.

வழக்கறிஞர் திரு. கே. மோதிலால்நேரு உட்பட வேறு பலரும் பேசினர். கலை, கதம்ப நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

### கைலாசபிள்ளையார் உற்சவம்

யாழ்ப்பாணம், திங்கள்

நல்லூர் ஸ்ரீ கைலாசபிள்ளையார்கோவில்வருடாந்த உற்சவம் நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பித்தது. இன்றைய விழாவில் விசேஷ நிகழ்ச்சிகள் இடம்பெறும். பத்துத்தினங்கள் நடைபெறும் இவ்வுற்சவம் தேர், தீர்த்த விழாவுடன் முடிவடையும்.

### அமைச்சர் தம்பதிகள் திரும்பினர்

உடுப்பிட்டி, ஞாயிறு

நேற்றுப்பகல் கொழும்பிலிருந்து உடுப்பிட்டி வாலிப முன்னணியின் புதுவருட களியாட்ட விழாவில் கலந்து கொள்வதற்காக வந்திருந்த தேசிய சேவை அமைச்சர் திரு.வீ.ஏ. சுகததாசாவும், பாரியாரும் நேற்றிரவு விசேட விமானம்மூலம் பலாலியிலிருந்து கொழும்பு திரும்பினர்.


அருந்துங்கள்!




பால் சபையின்
நீண்டகாலம்
பாவிக்கக்கூடிய
பால்
குளிர்ச்சியூட்டத்
தேவையற்ற
பால்
யாழ்ப்பாணத்தில் எங்கும் கிடைக்கும்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org